Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNODDAM

வெளியீடு-56 | 20 நவம்பர் 2010 | விலை: 10.00

# ஈ.பி.ஆர்.எல்.எவ் சர்வதேச கிளைகளின் பிராந்திய மாநாடு




பத்மநாபா ஈழமக்கள் பரட்சிகர விடுதலை முன்னணியின் சர்வதேச பிராந்தியக் கிளைகளின் மாநாடு 23.10.2010 சனிக்கிழமை பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடைபெற்றது.

இம்மாநாட்டில், பிரிததானியா், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் ஆகிய நாடுகளின் அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர். கனடா நாட்டுக் கிளையினர் கலந்து கொள்ள முடியாமையினால், தமது கிளை சார்பில் விபரமான அறிக்கையையும் ஆலோசனைகளையும் சமர்ப்பித்திருந்தனர்.

கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணசபை முதலமைச்சருமான தோழர் வரதாஜப் பெருமாள் இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்து வருகை தந்திருந்தார்.

(தொடர்ச்சி 4 ம் பக்கம்)



## பாரிஸ் மாநாடு திருப்புமுனையாக அமையட்டும்

### பிராந்திய மாநாட்டிற்கு பொதுச்செயலாளர் தி. ஸ்ரீதரன் வாழ்த்து

**தோழர் களே!**

எமது சர்வதேச கிளைகளின் மாநாட்டிற்காக நீங்கள் பிரான்சின் தலைநகர் பாரிசில் கூடியிருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். சமூக தார்மீக நெறி முறைகளுக்காக போராடுபவர்களை உலகின் எந்த தீய சக்திகளாலும் அழித்துவிட முடியாது என்பதை வரலாறு நிரூபித்துள்ளது.

கடந்த கால் நூற்றாண்டுக்கு மேல் எமது பாதையில் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத இழப்புக்களையும் துன்பங்களையும் சந்தித்து வந்திருக்கின்றோம். இப்படியும் நடக்குமா என கற்பனை செய்ய முடியாதவற்றை நாம் அனுபவித்திருக்கிறோம் பார்த்திருக்கிறோம். நாமும் எமது தாயக

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

## ஜனநாயகத்திற்கு நிந்தனை

### சுனில் ஹந்துநெட்டி உள்ளிட்டோர் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

மக்கள் விடுதலைமுன்னணயின் மத்திய குழு உறுப்பினர் சுனில் ஹந்துநெட்டி உட்பட உறுப்பினர்கள் உள்ளூர் வாசிகள் தாக்கபட்ட சம்பவத்தை பத்மநாபா ஈபிஆர்எல்எப் கண்டிக்கிறது.

இத்தாக்தல் நடந்து மறுநாள் யாழ் பஸ்நிலையத்தில் அவர்கள் நடத்திய ஆர்பாட்டதிலும் விரும பத்தகாத சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

தமது கோரிகிகைளை ஜனநாயக வழியில் வெளிப்படுத்துவதற்கான உரிமை தனிமனிதர் அரசியில் கட்சிகள் சிவில் சமூகத்திற்கு உண்டு.

இத்தாக்குதல் எதிர்காலம் சிறப்பானது என்பதற்கான அறிகுறியல்ல.

இது சகிக்கமுடியாதது. இன, சமூகங்களின் ஜனநாயக உரிமைகளும் தனிமனிதாகள், அரசியல் கட்சிகள், சிவில் சமூகத்தின் ஜனநாக உரிமைகளும் இருகண்கள் போன்றவை.

இவற்றை வலுப்படுத்துவதற்குப்பதிலாக இவை நிந்தனை செய்யப்படுவதும், துஷ்பிரயோகம் செய்யப்படுவதும் இலங்கையின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கி விடும்

நாட்டை அபகீர்த்திக்குள்ளாக்கும் இத்தகைய செயல்களுக்கு உடனடியாக முடிவுகட்டப்பட வேண்டும். ஜனநாயக உரிமைகள் பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

## திருமலை வர்த்தகர்கள் சங்கடத்தில்


திருகோணமலை மையப்பகுதியில் அமைநதிருக்கும் பத்திரகாளி அம்மன் கோவிலின் கொடியேற்ற திருவிழா காலத்திலும், தீபாவளி பண்டிகை, அதனையொட்டி வரும் கௌரிகாப்பு விரத நாட்களிலும் திருகோணமலை பெரிய முற்றவெளியில் அமைக்கப்படும் தற்காலிக வர்த்தக நிலையங்களால் நகரப்பகுதியில் நிரந்தரமாக வர்த்தக நிலையங்களை நடாத்தி வரும் உரிமையாளர்கள் மனம் நொந்துபோய் உள்ளனர்.

திருகோணமலை நகரசபையினர், நகரசபைக்கு பணத்தை எவ்வாறு சேர்ப்பது என்பதிலேயே குறியாக உள்ளனர். அவர்களைச் சார்ந்த மக்

(தொடர்ச்சி 4 ம் பக்கம் பார்க்க)

## நவம்பர் 19 தோழர் பத்மநாபா பிறந்த தினம்

## மக்களை நேசித்த மாமனிதர்



தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக சாத்வீக வழிகளில் நடந்த போராட்டங்களில் பங்காளனாகவும் பின்னர் ஆயுதந் தாங்கிய போராட்டத்திற்கு தலைமை ஏற்றிருந்தவர்களில் ஒருவராகவும் விளங்கியவர் அமரர் தோழர் பத்மநாபா. 1951ம் ஆண்டு நவம்பர் 19 ம் திகதி காங்கேசன்துறையில் பிறந்தார். ஆனால், அவரது வாழ்க்கைக் காலத்தின் பெரும் பகுதி இயக்க முகாம்களிலும், காடு, மேடுகளிலும், ஏழை, பாளைகளின் குடிசை வீடுகளிலுமே களிந்தது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கல்வி பயிலும் காலத்தில் 1970 இல் ஒரு மாணவனாக அரசியலில் ஈடுபடத் தொடங்கினார். தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை, ஈழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு என தனது

(தொடர்ச்சி 8 ம் பக்கம்)

## இடதுசாரி இயக்கத்தின் முன்னோடி

### விமலசிறி டி மெல் அவர்களின் மறைவுக்கு ஈபிஆர்எல்எவ் அஞ்சலி

இலங்கை சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விமலசிறி டிமெல் அவர்களின் திடீர் மறைவையிட்டு பத்மநாபா ஈபிஆர்எல்எவ் தனது ஆடழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.



அவர் இலங்கை இடதுசாரி இயக்கத்தை கட்டியெழுப்புவதில் கடந்த நான்கு தசாப்பதங்களுக்கு மேலாக கடுமையாக உழைத்தவர்

இலங்கையில் சிறுபான்மையாக இருக்கக் கூடிய தேசிய சமூகங்களின் உரிமைகளுக்காக இடைவிடாது குரல்கொடுத்து வந்தவர். சகல சமூகங்களுக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்

(தொடர்ச்சி 3 ம் பக்கம்)

உடனடி நடவடிக்கை தீர்வு பக்கம்- 03




உரிமைக்கு உலைவைக்கும் திருத்தம் பக்கம்- 05



பக்கம்- 09

இடதுசாரி சக்திகளின் கடமை பக்கம்- 10



சமகால உலகிற்கு பொருந்தாதவை பக்கம்- 11



## கண்ணோட்டம் Kannottam



# பல்லின தன்மை என்ற யதார்த்தம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்

இலங்கை ஒரு பல்லினங்களின் நாடு இங்கு வெவ்வேறு இன மத சமூக அடையாளங்களை ஒவ்வொரு சமூகமும் ஏற்றுக் கொண்டு மதித்து நடத்தல் மூலமே உண்மையான நல்லிணக் கத்தை ஏற்படுத்த முடியும்.

இல்லாமல் வென்றவர்களின் மேலாண்மைதான் சமூகநீதி என்று செயற்படுவது அறஞ் சார்ந்ததல்ல. தமிழர்கள் கீழ்படிவுள்ள பிரஜைகளாக இரண்டாந்தர மக்களாக சகித்து வாழ பழகிக்கொள்ள வேண்டுமென்ற போக்கு சமகால உலக நீதி நெறிகளுக்கு ஒவ்வாதது.

ஏழை என்றும் அடிமை என்றும் இந்தியாவில் இல்லையே என்று பாரதி இந்தியாவின் சுதந்திர கனவை வெளிப்படுத்தினார். இந்த கனவுதான் இலங்கையில் சிறுபான்மை சமூகங்களாக இருப் பவற்றுக்கும் இருக்கிறது.

ஆனால், பாரபட்சம் அநீதிகளால் ஏற்படும் விரக்தியின் கோபமும் ''பாதகம் செய்பவரை கண்டால் பயங்கொள்ளல் ஆகாது பாப்பா, மோதி மிதித்துவிடு பாப்பா அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா'' என்ற நிலைக்கு அடுத்தடுத்த தலைமுறைகளை நிர்ப்பந் திக்கலாம்.

எனவே, சமூகங்களிடையே நீதியை நிலைநாட்டுவதும் அறவழி யில் போராடுவதற்கான இடைவெளியை பாதுகாப்பதும் முக்கியத் துவம் வாய்ந்த விடயங்களாகும்.

வடக்கு கிழக்கில் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு வகைப்பட்ட பேரினவாத வகைப்பட்ட குடியேற்றங்களுக்கான முஸ்தீபுகள் நடைபெறுகின் றன என்று பீதிநிலை தமிழ், முஸ்லீம் மக்களிடையே நிலவுகிறது.

தவிர கண்கூடாகவே காணும்படியாக ஆங்காங்கே புத்தர் சிலை கள் முளைக்கின்றன. சாந்த சொரூபியான புத்தபிரான் ஆக்கிரமிப பாளர் அல்ல. மானிடத்தின் மீதான அன்பு, அகிம்சையின் குறியீடு. சிறுபான்மை சமூகங்கள் மத்தியில் வெறுப்பேற்றும் விதமாக திணிக்கப்படுகிறது. ஆக்கிரமிப்பின் குறியீடாக புத்தரை உபயோகி ப்பது புத்தரையும் பௌத்த மதத்தையும் சிறுமைப்படுத்தும் செயலாகும்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் படையினரின் பிரசன்னம் வட க்கு கிழக்கில் அவசியமற்றது. அர்த்தமற்றது. புளொட் இயக்கத் தின் தலைவர் த.சித்தார்த்தன் இந்த விடயத்தை உண்மையை கண்டறியும் குழுவின் முன் ஆணித்தரமாக வலியுறுத்தி இருக்கிறார்.

சிவில் நிர்வாகத்தில் மாத்திரமல்ல, மக்களின் அன்றாட வாழ்வின் மீதும் படையினரின் தலையீடு நிலவுகிறது. இது விரக்தியையும் சலிப்பையும் அதிகரிக்கவே செய்யும். ஒரு மரணச்சடங்கு, திருமண வைபவம் என்றாலும் படையினரு க்கு அறிவிக்கப்பட வேண்டும் இது நாம் சுதந்திரமற்ற பிரஜைகள் என்ற உணர்வையே ஏற்படுத்தும்.

சரத் பொன்சேகா மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களில் அவர் பதவியில் இருக்கும் போது அரசியல் முஸ்தீபுகளை மேற்கொண் டார் என்று கூறப்படுகிறது. அது எப்படி தவறானதோ அதேபோல் சிவில் நிர்வாகத்திலும் மக்களின் அன்றாட வாழ்வின் மீதும் தலையீடுகளை நிகழ்த்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் தமிழர் களின் நிலங்களில் படையினர் கடைகளை தேனீர் விடுதிகளை நடத்துகிறார்கள்.

இது மக்களின் இயல்பான பொருளாதார நடவடிக்கைகளில் தயக் கத்தையும் பதற்றத்தையும் அதிகரிக்கும். தாம் வன்முறைக்கு ஆளாகலாம், கண்காணிக்கப்படலாம் என்ற நிலையை ஏற்படுத் தும். அதுவே இன்றும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

மக்களின் சுதந்திர உணர்வு தங்களது தனித்துவம் பேணப்படு கிறது என்ற நிலையிலேயே பாரியளவு சமூக பொருளதார அபி விருத்தி ஏற்படும்.

புலிகளின் காலத்திலும் அதுதான். தற்போது புதிய எஜமானர்களு க்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்ற நிலை. இந்த நிலை மாற வேண்டும்.

இலங்கையின் படை பொலிஸ் துறையிலும் பல்லின தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமானது. சாராம்சத்தில் இலங்கையின் படை, பொலிஸ் என்பது சிங்கள படை பொலிசாக இருக்கிறது. இதில் குணாம்ச ரீதியான மாற்றம் வராதவரை இங்கு பிரச்சினைகள் அகலாது.

இலங்கையின் அரச முறைமையில் தாமும் பங்குதாரர்கள் என தமிழ், முஸ்லீம், மலையக சமூகங்களின் சராசரி மக்கள் உணரக் கூடியதான மாற்றங்கள் நிகழ வேண்டும். அப்போதுதான் இலங்கை ஆசியாவின் சிறப்பான நாடுகளில் ஒன்றாக மிளிர முடியும்.

சிறுபான்மை, பெரும்பான்மை என எதுவும் கிடை.யாது. ஒரே நாடு ஒரே மக்கள் என்ற வெற்று கோஷங்கள் கசப்பான யதார்த் தங்களின் முன்னால் அடிபட்டு போகின்றன.

முதலில் கசப்பான யதார்த்தங்களை கண்டறிந்து தீர்வு காண முயல வேண்டும்.

# புத்துயிர் பெறும் தொழிற்சங்கங்கள்

1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கை களுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய இயங்கங்களின் செயற்பாட்டினை புலிகள் பலவந்தமாகத் தடுத்தனர். இதன் பின்னர் வடக்கு கிழக்கில் தொழிற்சங்கங்கள், வெகுஜன அமை ப்புக்களின் செயற்பாடுகளும் ஸ்தம் பித்துப் போயின. கடந்த வருடம் மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தொழிற் சங்கங்களும், வெகுஜன அமைப்புக்களும் சுதந்திரமாக செய ற்படும் நிலை மீண்டும் தோன்றியுள்ளது.

வடமாகாணத்திலுள்ள அரசாங்க அலு வலகங்களில் கடமையாற்றும் மத்திய மற்றும் மாகாண முகாமைத்துவ உத வியாளர்கள் ஒன்றிணைந்து மத்திய, மாகாண முகாமைத்துவ உதவியாளர் சங்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். மத்திய அரச அலுவலகங்களான மாவட்ட செயலகம், பிரதேச செயல கங்களிலும் மாகாண அரச அலுவல கங்களான மாகாண சபை, பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகள் மற்றும் வலயக்கல்வி அலு வலகங்கள் ஆகியவறின் ஊழியர்கள் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

இச்சங்கத்தின் இவ்வாண்டுக்கான நிர் வாக சபைக்கு யாழ் கல்வி வலயத் தைச் சேர்ந்த த.தர்மரட்ணம் தலை வராகவும், கரவெட்டி பிரதேச செயலக த்தைச் சேர்ந்த சி. ஜெயசங்கர் பொது ச்செயலாளராகவும் தெரிவு செய்யப் பட்டுள்ளதுடன் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த க.சந்திரசேகரம பிள்ளை உபதலைவராகவும், கோப் பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திருமதி தர்ஷினி கிருஷ்ணகுமார் உப செயலாளராகவும் யாழ் பிரதேச செய லகத்தைச் சேர்ந்த செல்வி பத்மினி லூயிஸ் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தில் உறுப்பினர்களைக் கொண்ட இச்சங்கம் கிழக்கு மாகாண த்திலும் உறுப்பினர்களை சேர்த்துக் கொள்வதுடன் சங்கம் புதிய பொறி முறையில் செயற்படவுள்ளதாகவும் பொதுச் செயலாளர் சி.ஜெயசங்கர் தெரிவித்துள்ளார்.

## ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் சர்வதேச பிராந்திய .. 

(1ம் பக்கத் தொடர்ச்சி )

இம்மாநாட்டில் பங்குபற்றிய பேராளர் கள், தத்தம் நாட்டு நடப்புகள், தற்போ தைய செயற்பாடுகள், எதிர்பார்ப்புகள் என்பவை பற்றிய விடயங்களில் தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்ட னர். அத்துடன், வெவ்வேறு தலைப்பு களில் குழுநிலை ஆலோசனைகள் நடாத்தப்பட்டு, வெளிநாட்டுக் கிளைக ளின் எதிர்காலச் செயற்பாடுகளுக் கான தீர்மானங்களும் நெறிமுறை களும் வகுக்கப்பட்டன.




திரு. அ. வரதராஜப்பெருமாள் இம் மாநாட்டில் ஆற்றிய உரையின்போது, இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கும் அளப்பரிய துன்பங்கள், சமூகத்தின் பலவீனமான பகுதியைச் சேர்ந்தோர் மத்தியில் நில வும் தாங்கொணாப் பாதிப்புகள் ஆகிய வற்றை விரிவாக விளக்கினார். போர் மேலும் தொடர்ந்திருக்குமானால், தொடர்ந்தும் பயனற்ற உயிரிழப்புக ளுக்கும், அழிவுகளுக்குமே வழிகோ லியிருக்கும் என்றார்.

போரின் முடிவைத் தொடர்ந்து இன்று ஏற்பட்டிருக்கும் ஜனநாயக இடைவெ ளியில், அனைத்து தமிழ்பேசும் மக்க ளின் உரிமையை வென்றெடுக்கவும், அரசியல், சமூக, பொருளாதார சமத்து வத்துக்காகவும், சகல அடக்கு முறை களுக்கு எதிராகவும், காத்திரமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி னார். தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில், பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி, இணை ந்த வடக்கு-கிழக்கு மாகாணசபைக் குத் தலைமை தாங்கியமை, வரலா ற்றில் பதிவு செய்ய வேண்டிய நிக ழ்வு என்றும் தெரிவித்தார்.

தமிழ்பேசும் மக்கள் தங்கள் அரசியல் உரிமைகளை எய்தவும், அவர்கள் மத் தியில் ஜனநாயக சூழலுக்கான நிலை மையை நிலைநாட்டவும் பல்வேறு தியாகங்களைச் செய்ததோடு அவற்று கக்காகத் தொடர்ந்தும் ஈபிஆர்எல்எவ் உழைத்து வருகின்றது எனக் குறிப் பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகை யில், இலங்கைத் தமிழர்களில் ஏறத் தாழ மூன்றில் ஒரு பகுதியினர் புலம் பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் வாழ் கிறார்கள் என்ற வகையில், இலங்கை யில் வாழும் தமிழ்பேசும் மக்களின் ஜனநாயக மற்றும் அடிப்படை உரி மைகளை நிலைநாட்டி இலங்கை மக் கள் அனைவரினதும் வாழ்வாதாரங் களை மேம்படுத்துவதற்கு புலம் பெய ர்ந்து வாழும் தமிழர்களின் பங்கு கணி சமாக இருக்கும், இருக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டினார்.

மாநாட்டின் முடிவில், கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- **ஜனநாயக விழுமியங்களை வலுப்படுத்துதல், தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகளுக்கான தீர்வுகள் சம்ப ந்தமான செயற்பாடுகளில் தமிழ்பேசும் மக்களின் வெவ் வேறு கட்சிகளுக்கிடையே ஒருமித்த அணுகுமுறையை ஏற்படுத்துவதற்கான முயற்சி களை ஈபிஆர்எல்எவ் தொடர் ந்தும் மேற்கொள்ளும்.**
- **ஈபிஆர்எல்எவ், ஒரு பலமான தும், ஒற்றுமையானதுமான ஜனநாயக இலங்கையைக் கட்டியெழுப்ப முயல்வதோடு, இந்த நோக்கத்தை எய்துவ தில் ஈடுபட்டிருப்போர் அனைவ ருக்கும் சகல ஒத்தாசைகளை யும் வழங்கும்.**
- **தமிழ்பேசும் மக்களின் ஜனநா யக கட்சிகளுடன் இணைந்து, நியாயமானதும், ஏற்புடைய தும், நீடித்து நிலைக்கக் கூடி யதுமான அரசியல் தீர்வை எய்துவதற்கான வழிமுறை மைகளைத் துரிதமாக முன் னெடுக்கும்படி இலங்கை அரசை ஈபிஆர்எல்எவ் கோரு கிறது. இத்தகைய அரசியல் தீர்வு, இலங்கையின் அனைத் துச் சமூகங்களினதும் சமா தான வாழ்வு, சுதந்திரம், சபீட சம், பொருளாதார மேம்பாடு ஆகியவற்றிற்கு இன்றியமை யாதது என ஈபிஆர்எல்எவ் நம்புகிறது.**
- **பிரிவினைவாத, எதிர்மறை யான, பயங்கரவாத செயற் பாடுகள் கொண்ட கடந்தகால தமிழ் அரசியல் அணுகுமுறை களை ஈபிஆர்எல்எவ் நிரா கரிப்பதோடு, அனைத்து சிங் கள, முஸ்லிம் சமூகங்களுட னான பரஸ்பர புரிந்துணர்வை யும், நல்லுறவையும் மேம்ப டுத்தும் அணுகுமுறைகளை ஈபிஆர்எல்எவ் தொடர்ந்தும் முன்னெடுக்கும்.**

மாநாட்டைத் தொடர்ந்து, அடுத்த நாள் 24.10.2010 ஞாயிறு காலை, கட்சி அங்கத்தினர்களுடன் ஒரு அரசியல் கலந்துரையாடலும், மாலை ஏனைய ஆதரவாளர்கள், அனுதாபிகள், இதர தமிழ்க்கட்சிகள், அமைப்புக்களைச் சேர்ந்தோர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

த. சாந்தன்
ஈபிஆர்எலஎவ்
சர்வதேசச் செயலகம்
பாரிஸ்
30 ஒக்ரோபர், 2010

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:–

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118

# அரசாங்கத்தின் உடனடி நடவடிக்கை

## அடிப்படை பிரச்சினைக்கு தீர்வு காண்பதாயிருக்க வேண்டும்

த. சித்தார்த்தன் -தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் 26.10.2010 அன்று சாட்சியமளித்துள்ளார். யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள போதிலும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வுக்காண்பதற்கான எந்தவொரு அறிகுறியும் தென்படாதிருப்பதால் தமிழ் சமூகம் தங்களது தியாகங்கள் அர்ப்பணிப்புகள் யாவும் வீணாகி விட்டதோ என்ற ஏக்கத்தில் உள்ளனர் என அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இவ்விடயத்தில் அக்கறையற்றிருக்கும் தன்மையையே வெளிக்காட்டி நிற்கின்றது. அத்துடன் வடக்கில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றமையானது சிங்களக் குடியேற்றத்திற்கான முன்னேற்பாடுகள் தான் என மக்கள் மத்தியில் சந்தேகமும் நிலவி வருகின்றது.

இந் நடவடிக்கையினை வன்னியில் ஏற்கனவே இருந்த இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கும் ஒரு கபட நோக்கம் கொண்ட செயலெனவும் மக்கள் கருதுகின்றனர். இதேவேளை 13 வது திருத்தச் சட்டத்தினை ஆரம்பப் புள்ளியாக வைத்து அதிலிருந்து தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

இதுவே நாட்டின் எதிர்காலம் செழிப்பாவதற்கும், நாட்டு மக்கள் ஒற்றுமையாகவும், அமைதியாகவும் வாழ்வதற்கும் வழிவகுக்கும். கடந்த இரு தலைமுறையினர் அனுபவித்து வந்த துன்பங்களும், துயரங்களும், இழப்புகளும், வேதனைகளும், நெருக்கடிகளும் வருங்கால சந்ததியினருக்கு வரக்கூடாதென்பதே எமது ஆத்மார்த்தமான விருப்பமாகும்.



வடக்கில் நல்லிணகத்தை ஏற்படுத்தவும், அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கும் இராணுவத்தின் தலையீடு வரையறுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் இடம்பெற்ற யுத்தத்தினால் விடுதலைப் புலிகள் இயக்கத்தினைச் சாராத பெரும்பாலான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களை அரசாங்கம் கவனத்திற் கொள்ளாது இருப்பதாகவும் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து சாட்சியமளித்த அவர் மேலும் கூறியதாவது, "யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள விதவைகளுக்கு அரசாங்கம் எந்தவொரு சலுகையினையும் வழங்காதுள்ளது. ஆனால், புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை கவனத்திற்கொண்டு அவர்களுக்கான சலுகைகளை தொடர்ந்தும் அரசாங்கம் வழங்கி வருகின்றது." என்றார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில், வடக்கின் அதிகளவான பிரதேசங்களில் இராணுவத்தின் நிர்வாகமே பெருமளவில் காணப்படுகிறது. இதே வேளை, முல்லைத்தீவிலும் பண்டிவிரிச்சானிலும் அதிகளவிலான தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் அப்பிரதேச மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. இராணுவத்தினர் மாத்திரமே குறித்த விகாரைகளுக்கு சென்று வருவதை காணக் கூடியதாயுள்ளது.

நாம் எந்தவொரு மதத்துக்கும் விரோதமானவர்கள் அல்லர். ஆனால் பொதுமக் ளு ஸக்கு பாதிப்பினை ஏற்படுத்தக் கூடிய இவ்வாறான சிறு விடயங்கள் குறித்து அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அத்துடன், குறித்த பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள இந்த பௌத்த விகாரைகளை காரணம் காட்டி அரசாங்கம் பெரும்பான்மையின மக்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

# இனி உயர்பாதுகாப்பு வலயங்கள் இருக்க முடியாது

## பச்சிலைப்பள்ளியில் மக்களுடனான சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

இது எமது அரசாங்கம், இனிமேல் இங்கு உயர்பாதுகாப்பு வலயமென்று ஒன்றில்லை. இராணுவ முகாம்கள் தேவைகருதி இருக்கலாம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளார்.

பளைப் பகுதியில் அமையப் பெற்றுள்ள இலங்கைத் திருச்சபை தேவாலயத்தில் பச்சிலைப்பள்ளி மேற்கு பிரதேச மக்களுடனான சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி தலைமையில் வவுனியாவில் நடைபெற்ற வட



மாகாண அபிவிருத்தி முன்னேற்றம் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தின் போதும் இக்கருத்தையே தான் முனவைத்ததாகவும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாம் பெற்ற இந்த சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டுமென்றும் இதனை நாம் எவருக்கும் தாரைவார்த்துக் கொடுக்கக் கூடாதென்றும் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர் 'கடந்த காலங்களில் தெரிந்தோ, தெரியாமலோ அழிவுக்காக புலம்பெயர் சமூகத்தின் ஒருசரார் உதவிபுரிந்திருந்தனர். இனி எதிர்காலங்களில் எமது மக்களின் அபிவிருத்திக்காகவும், ஆக்கத்திற்காகவும் இவர்கள் உதவி ஒத்தாசைகளைப் புரிய வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாம் எதிர்ப்பரசியலை விடுத்து, இணக்க அரசியல் மூலம் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றோம். அதிலும் அரசியலுக்காக நாம் ஒருபோதும் மக்கள் பணி செய்யவில்லை என்பதுடன் மக்களுக்கு உதவுவதே எமது நோக்கமாகும். நன்றிக்காகவும், அரசியல் சுயலாபத்திற்காகவும் நாம் அரசியலில் பங்கெடுக்கவில்லை. மக்களது சுபீட்சமான எதிர்காலத்திற்காகவும், வளமான வாழ்வுக்காகவுமே எமது அரசியல் பணிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இன்றுள்ள சுமூகமானதொரு சூழ்நிலைக்கு தமிழ்ச் சமூகம் அளவுக்கதிகமான விலையைக் கொடுத்துள்ளது. இதனால் அவர்களது வாழ்வை கட்டியெழுப்ப வேண்டிய கட்டாய நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.
எப்போது, எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்றிருந்த ஒரு பதட்டமான சூழ்நிலையை அகற்றி இன்று சுமுகமானதொரு சூழ்நிலையை உருவாக்கித் தந்துள்ள ஜனாதிபதிக்கும் பாதுகாப்புச் செயலர் உட்பட சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றி கூறுவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முகமாலை, கிளாலி, இத்தாவில், இந்திரபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள மிதிவெடிகளை அகற்றி அப்பகுதியில் மக்கள் மீள்குடியமர்வதற்கு இன்னும் சில காலம் செல்லும் எனவும் அதுவரையில் பொறுமையாக இருக்குமாறும் மக்களைக் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக ஆண்கள், பெண்களுக்காக 50 துவிச்சக்கர வண்டிகள் எதிர்வரும் 07ம் திகதி வழங்கப்படுமெனவும் ஏனைய கோரிக்கைகள் தேவைகள் தொடர்பில் உயர்மட்ட மாநாட்டில் முடிவெடுக்கப்படுமென்றும் யாருக்கும் பயப்படாத சுதந்திரமாக வாழக் கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டுமென்பதே தனது விருப்பமென்றும் ஜனாதிபதியின் விருப்பமென்றும் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

# இப்படியும் நடக்கிறது

## இடம்பெயர்ந்தவர்களுக்கு இராணுவத்தினரின் வீடுகள்

வட கிழக்கு மோதல் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்காக 4 ஆயிரத்து 575 வீடுகள் இராணுவத்தினரால் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கிணங்க கிளிநொச்சியில் 2 ஆயிரத்து 293 வீடுகளும் முல்லைத்தீவில் ஆயிரத்து 30 வீடுகளும் வன்னியில் இதர பகுதிகளில் 672 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல கூறியுள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் 572 வீடுகளும், கிழக்கு மாகாணத்தில் 18 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும், 2 ஆயிரத்து 758 வீடுகள் புனர்நிர்மாணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் சிங்களத் திரைப்படப் பிடிப்பு

யாழ்ப்பாணத்தில் தமிழ் சிங்கள கலைஞர்கள், நடிகர்கள் பங்கேற்கும் சிங்களத் திரைப்படம் ஒன்றுக்கா படப்பிடிப்புக்கள் நடைபெற்று வருகின்றன. "செல்வம்" என்னும் பெயரிலான இந்தச் சிங்களத் திரைப்படம், தேசிய ஐக்கியத்தை வலியுறுத்தும் வகையில் படமாக்கப்பட்டு வருவதாக திரைப்படத் தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். பேராளியொருவர் தேச நலனில் அக்கறை கொண்டு படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றார். மருத்துவ பீடத்தில் கல்வி கற்கும் சிங்கள மாணவியுடன் இவருக்குக் காதல் ஏற்படுகின்றது. இருவரும் சைவ முறைப்படி திருமணம் செய்துகொள்ளும் போது ஏற்படும் பிரச்சினைகளை மையமாகக் வைத்தே இந்தத் திரைப்படம் எடுக்கப்பட்டு வருகின்றது. இப்படத்தை, பிரபல திரைப்பட இயக்குநர் என்.பத்மசிறி நெறிப்படுத்தி வருகின்றார். பிரபல சிங்களத் திரைப்பட நடிகையும், பாராளுமன்ற உறுப்பினருமான மாலினி பொன்சேகா உட்பட பல முன்னணிக் கலைஞர்கள் நடித்த காட்சிகள் அண்மையில் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் கல்யாண மண்டபத்தில் படமாக்கப்பட்டது. யாழ் ரயில் நிலையத்தில் தங்கியிருக்கும் சிங்கள மக்களில் சிலரும் இந்தப் படத்தில் துணைப்பாத்திரங்களில் நடிக்கின்றனர்.

## இராணுவத்தினர் புனரமைத்த இந்து ஆலயம்

கடந்த பன்னிரண்டு வருடங்களாக மூடிக்கிடந்த இந்து ஆலயமொன்று இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்தில் கல்மடு 2ம் யூனிட் பகுதியில் அமைந்திருந்த முருகன் ஆலயமே இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாட்டை அந்த பிரதேச இராணுவ அதிகாரிகள் செய்திருந்தனர். வன்னி மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன உள்ளிட்ட சிரேஷ்ட உயர் அதிகாரிகள் பலரும் இங்கு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டனர். கல்மடு 2ம் யூனிட் உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டு மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் கோவில் புனருத்தாரண வேலைகளை இராணுவத்தினர் மேற்கொண்டனர். மீள் குடியேறிய மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த கிராம மக்களின் பல தேவைகளை நிவர்த்தி செய்ய பாதுகாப்புப் படையினர் முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஏ 9 வீதியால் யாழ்ப்பாணம் செல்லத் தடை

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த இரு மதகுருமார்கள் ஏ 9 வீதியூடாக யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்கப்படவில்லை விமானத்தில் செல்லுமாறு அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொண்டு ஏ9 வீதியூடாக வாகனம் ஒன்றில் யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்ட குறிப்பிட்ட இரு மதகுருமார்களும் ஓமந்தை சோதனை சாவடியில் வைத்து பயணத்தை தொடர முடியாதெனக் கூறி கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இலங்கையர் அல்லாதவர் எவரும் விமானத்தின் மூலமே யாழ்ப்பாணம் செல்ல முடியும் என அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இடதுசாரி இயக்கத்தின் முன்னோடி ...

1 ம் பக்கத் தொடர்ச்சி

என்று 50 களின் இறுதியில் நடைபெற்ற பிரச்சார இயக்கத்தில், காலஞ்சென்ற கலாநிதி என்.எம். பெரேராவுடன் இணைந்து பங்கு பற்றியவர். கொழும்பு நகரமண்டபத்தில் இவர் பங்குபற்றிய இத்தகைய கூட்டம் ஒன்றில் குண்டு வீசப்பட்டது குறிப்பிடத்தக்கது.

13வது திருத்தத்திற்கு அப்பால் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும், இலங்கையில் ஜனநாயகம் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று விமல சிறி டி மெல் அண்மைக்காலத்தில் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார்.

கட்சியின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டிருக்கையிலேயே அவர் மாரடைப்பால் மரணமானார்.

அன்னார் தனது பூதவுடலையும் கூட இலங்கை ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்களின் தேவைக்கு வழங்குமாறு பணித்திருந்தார்.

இத்தகைய சமூக பிரக்ஞை கொண்ட தோழர் விமலசிறி டி மெல் அவர்களுக்கு எம் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் உற்ற சுற்றத்தினருக்கும் கட்சித் தோழர்களுக்கும் எம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

# நெஞ்சத்தை நெருடும் குடியேற்றம்

## நாவற்குழி குடியேற்றம் இன நல்லுறவை பாதிக்கும் செயல்

இயல்பாக மக்கள் இலங்கையின் பல்வேறு இடங்களிலும் குடியேறுவதென்பது வேறு. ஆனால், திட்டமிட்ட வகையில் ஒரு சமூகத்தின் பாரம்பரிய பிரதேசத்தில் சனத்தொகை விகிதாசாரத்தை மாற்றும் விதமாக திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை பத்மநாபா ஈபிஆர்எல்எப் தயவு தாட்சணியமின்றிக் கண்டிக்கிறது.

குறிப்பாக நாவற்குழிப் பிரதேசத்தில் பெரும்பான்மை இனத்தை சேர்நத் சிலரை கருவியாக்கி நடைபெறும் குடியேற்றத்தை குறிப்பிடலாம்.

இத்தகைய நடவடிக்கைகள் இன நல்லுறவுக்கு உதவாது. இன உறவுகளை மோசமாக்கலாம். கடந்தகால கசப்பான இன உறவு வரலாறும் இதைத்தான் வலியுறுத்தி நிற்கிறது.

எனவே உடனடியாக இத்தகைய முயற்சிகள் கைவிடப்பட வேண்டும் .இந்தக் குடியேற்றம் வாபஸ் பெறப்பட வேண்டும்.

இனக்கலவரங்கள் இடம்பெற்றபோது இடம் பெயாந்த மக்கள் ஆதாரங்களின் அடிப்படையில் அவர்களின் சொத்துக்கள் மீளக் கையளிக்கபட வேண்டும் என்பது நியாயமானதே.

இது இலங்கையின் அனைத்து இனமக்களுக்கும் பொருந்தும் . இனக்கலவரங்களின் போது தமிழ் முஸ்லீம் மலையக மக்களே பாரிய அளவில் பாதிக்கபட்டார்கள் என்பதும் உண்மையாகும்.

எனவே இவ்விடயத்தில் விபரீதங்களுக்கு இட்டுச் செல்லாத நிதானமான இனங்களிடையே உறவை வலுப்படுத்தும் அணுகுமுறை தேவை.

# டில்மாவின் வெற்றி மானிட விடுதலையை விரும்பும் சக்திகளுக்கு நம்பிக்கை தரும் செய்தி



உலகின் மிக முக்கியத்துவம் வாய்ந்த தென்னமெரிக்க நாடான பிரேசிலின் ஜனாதிபதியாக டில்மா ரஷப் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 62 வயதான டில்மா 1960 களில் பிரேசிலில் நிலவிய கொடூர இராணுவ ஆட்சிக்கு எதிரான இடதுசாரி போராட்டக்காரராக இருந்தார்.

இவர் வெவ்வேறு பெயர்களில் தலைமறைவு வாழ்க்கையை நடத்தியவர். பிரேசில் இராணுவ ஆட்சியாளர்களால் 60 களின் இறுதிப்பகுதியில் கைது செய்யப்பட்ட டில்மா மின்சார அதிர்ச்சியூட்டல் உட்பட பல்வேறு சித்திரவதைகளை அனுபவித்தவர். இராணுவ ஆட்சியாளர்கள் மிகவும் ஆபத்தான பயங்கரமான பெண் என சித்தரித்திருந்தது. இவருடைய சகாக்கள் பலர் காணாமல் போயும் கொல்லப்பட்டும் இருக்கிறார்கள்.

பிரேசிலில் பதவி விலகிச் செல்லும் ஜனாதிபதி லூலா ஒரு உலோகத் தொழிற்சாலையின் தொழிலாளியாக தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் வகித்து அரசியலில் பிரவேசித்தவர். டில்மாவின் எழுச்சியில் லூலாவின் பங்களிப்பும் உண்டு.1972 இல் சிறையில் இருந்து வெளிவந்த டில்மா 1977 இல் பொருளதாரத் துறையில் பட்டம் பெற்றவர். 1980 களின் நடுப்பகுதியில் ஏற்பட்ட ஜனநாயக மாற்றத்தின் பின்னர் அவர் மீண்டும் தீவிர அரசியலில் பிரவேசித்தார்.

இவர் ஆரம்பத்தில் தேசிய விடுதலை தலைமை என்னும் அமைப்பில் அங்கத்துவம் வகித்தவர். இவர் கியூபா புரட்சியினாலும் ஏனைய லத்தீன் அமெரிக்க எழுச்சிகளாலும் ஈர்க்கப்பட்டவர்.

தற்போது பிரேசிலின் தொழிலாளர் கட்சியின் ஊடாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக இருக்க முடியாதென்று பிரேசிலின் அரசியல் சட்டம் கூறுகிறது. இதன் பிரகாரமே லூலா விடைபெறும் போது டில்மா ஜனாதிபதி வேட்பாளராக களம் இறங்கினார்.

அவர் பிரேசிலில் வறுமையை ஒழிப்பதே தனது முதல் பணியென சூளுரைத்துள்ளார்.

டில்மாவின் எழுச்சி உலகளாவிய அளவில் சமூக நீதியை வேண்டி நிற்கும் சக்திகளுக்கு கிடைத்த நம்பிக்கை தரும் செய்தி ஆகும்.

உலகின் பல புரட்சியாளர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை டில்மா கொண்டிருக்கிறார். இராணுவ ஆட்சியாளர்கள் எவ்வளவு கீழ்த்தரமானவர்கள், தார்மீக நெறிமுறைகளுக்கு எதிரானவர்கள், மனிதகுலத்திற்கு விரோதமானவர்கள் என்பதை அவர் சித்திரவதை கூடங்களில் அனுபவ பூர்வமாக அறிந்திருக்கிறார்.

மனித உரிமையும், ஜனநாயகமும், சமூக சமத்துவமும் வாழ்வின் ஜீவாதாரமான பகுதிகள் என்பது அவருக்கு தெரியும்.

அவர் உப்பரிகையில் இருந்து வரவில்லை. நிலப்பிரபுத்துவ சாயல்களுடன் வரவில்லை. லூலா குறிப்பிட்டது போல அவரிடம் நெல்சன் மண்டேலா போன்றதொரு பக்கம் இருக்கிறது.

# இந்தோனேசியாவில் தொடரும் அனர்த்தங்கள்



இந்தோனேசியாவில் கடந்த வாரம் 7.5 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பூகம்பம் சுனாமி அலைகளை உருவாக்கி 450 இற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளார்கள். 80 ற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளார்கள்.

இதற்கிடையே இங்கு பிரசித்தமான எரிமலை வெடித்து அதன் சுற்றாடல் பகுதியை மோசமாக பாதித்துள்ளது. அதிலும் 30 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அடிக்கடி அந்த எரிமலை சீறிய வண்ணமாக உள்ளது.

நியூசிலாந்தில் பூகம்பம் ஏற்பட்டு சில வாரங்களே கடந்திருக்கும் நிலையில் இங்கு இந்த பாரிய பூமியதிர்ச்சி ஏற்பட்டு உள்ளது.

2004 இல் நிகழ்ந்த சுனாமி அனர்த்தத்தில் இந்தோனேசியாவில் மாத்திரம் 1,70,000 பேர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பூமி அதிர்ச்சி சுனாமி அலைகளை கண்காணிப்பதற்கான உலகளாவிய வினைத்திறன் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதனையே இச் சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன.

**ம**ன்னிப்பு கேட்கும்படி
அப்புவுக்கு நான் கற்பித்த நாளில்
மன்னிப்பு என்றால்
என்னவென்று கேட்கிறான்.
ஒரு குழந்தைக்குப்
புரியவைக்க முடியுமா

மன்னிப்பு என்பது
ஒரு குற்றத்திற்கு வழங்கப்படும்
அதிகபட்ச தண்டனையென்று

அது வலிமையுள்ளவர்கள்
வலிமையற்றவர்கள்மேல் செலுத்தும்
அதிகாரம் என்று

வலிமையற்றவர்கள்
தமது இயலாமைக்குத்
தாமே வழங்கிக்கொள்ளும்
சமாதானமென்று

கடவுள்களின் ஓய்வு நேரப்
பொழுது போக்கு என்று

பந்தயத்தில் தோற்ற குதிரையை
உயிரோடு விடுவது என்று

இன்னொரு சந்தர்ப்பம்
அளிக்கும் முயற்சி என்று
இன்னொரு பக்கத்தைப்
புரிந்துகொள்வது என்று

தண்டனையை
ஒத்தி வைப்பது என்று

நண்பர்களுக்குத் தரும்
சிறந்த பரிசு என்று

ஒரு துரோகத்தை
அறியாததுபோல் நடிப்பது என்று

எந்தத் தவறும் செய்யாத போதும்கூட
கேட்கப்படுவது என்று

பெரும்பாலான சமயங்களில்
மறுக்கப்படுவது என்று

ஒருவரை அச்சத்திலிருந்து
விடுவிப்பது என்று

ஒருவரை நிரந்தரமாக
அடிமைப்படுவத்து என்று

# மன்னிப்பு என்பது

மனுஷ்ய புத்திரன் கவிதைகளிலிருந்து

மரண தண்டனைக் குற்றவாளிக்கு
தூக்கு மேடையில் வழங்கப்படும்
கருணை என்று

ஒரு முடிவற்ற துன்பத்திற்கு
நம்மை பழக்கப்படுத்திக்கொள்வது
என்று

எளிய தேவைகளுக்காக
செய்துகொள்ளும்
சமூக உடன்படிக்கை என்று

கன்னத்தில் அறைந்தவர்களுக்கு
மறுகன்னத்தை காட்டுவது என்று

படுக்கையறையில
மண்டியிடுதல் என்று

ஒரு இந்தியன் கண்டுபிடித்த
வினோத தத்துவம் என்று
பிரார்த்தனைகளின்
மையப் பொருள் என்று

ஒரு புரட்சியாளனால்
உதாசீனப்படுத்தப்படுவது என்று

மறதியின்
இன்னொரு பெயர் என்று

அடிக்கடி பயன்படுத்தப்படும்
ஒரு அர்த்தமற்ற சொல் என்று

மிகவும் எளிய
ஒரு தந்திரமென்று

ஒரு போதைப்பொருள் என்று

மன்னிக்கவே முடியாத ஒன்றை
மன்னிப்பது போல் பாவனை செய்வது
என்று

ஒரு குழந்தைக்குப்
புரியவைக்க முடியுமா

மன்னிப்பு என்பது
இறுதியில்


ஒரு கண்ணீர்த்துளி

மட்டுமே என்று

**நன்றி- உயிர்மை**

# திருமலை வர்த்தகர்கள் சங்கடத்தில்

*(1ம் பக்கத் தொடர்ச்சி)*



களைப் பற்றியோ, நிரந்தர குடியிருப்பாளர் கள், வரியிறுப்பாளர்கள் பற்றியோ கவலைப் படுவதாகத் தெரியவில்லை. இங்கு நிரந்தரமாக அமைந்திருக்கும் வர்த்தக நிலையங்களிற்கு வருடா வருடம் நகரசபை வரியை உயர்த்தி வருவதுடன் இம்மாதிரியான தற்காலிக கடைகளிற்கு பணம் பெற்றுக்கொண்டு இடம் கொடுப்பதனால் எமது பண்டிகைக் கால வியாபாரம் பெரிதும் பாதிப்படைகின்றது. சிறு வியாபாரம் செய்யும் நாங்கள் நகரசபை வரி, மாகாண இறைவரி, மின்சாரக்கட்டணம், வாடகை, நீர் கட்டணம், வேலை செய்பவர்களிற்கான கூலி, உரிமையாளராகிய எமது குடும்பச்செலவு மற்றும் வேறு தேவைகளிற்கான கெடுப்பனவுகள் என இத்தனை சுமைகள் உள்ளன. இவை அனைத்தையும் ஈடுசெய்ய பண்டிகைகால வியாபாரத்தையே நம்பி இருக்கும் போது நகரசபை வருமானத்திற்காக தற்காலிக கடைகளை வெளிமாவட்டங்களில் இருந்துவரும் வர்த்தகர்களிற்கு வழங்கி எமது வியாபாரததிற்கு குந்தகம் விளைவிக்கப்படுகின்றது. இவற்றை தடுத்து நிறுத்தி திருவிழாக்காலங்களில் மட்டும் கடைபோடுவதென்றால் திருவிழா தொடங்கும் போது ஆரம்பித்து முடியும் நாளில் கடைகளை அகற்ற வேண்டும் இதுவே திருவிழாக்கால கடையின் சிறந்த முகாமையாகும் எனத் தெரிவித்ததுடன் நகரசபையினர் காசு வசூல் செய்வதை மட்டும் நோக்கமாக கொள்ளாமல் நிரந்தரமாக வர்த்தகம் செய்துவரும் வர்த்தகர்களையும் அவர்களைச்சார்ந்த மக்களையும் கவனத்திலெடுத்து அவர்கள் பாதிப்படையாதவாறு அவர்களின் நலன் கருதி முடிவெடுக்க வேண்டுமென வேதனையுடனும் மனம் கொதிப்படைந்த நிலையிலும் வர்த்தகர்கள் அவர்களின் மனக்குமுறலை வெளிப்படுத்தினர்.

மேலும், இத்தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டு வரும் பெரிய முற்றவெளி காலம் காலமாக பல விளைட்டுக் கழகங்கள் விளையாடி வரும் இடமாகும். இது தினமும் பயிற்சி மேற்கொள்ளும் விளையாட்டு வீரர்களையும் விசனப்பட வைத்துள்ளது.

நிரந்தரமாக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் பல இருக்கும் போது எந்தவொரு விளையாட்டுக் கழகத்திடமும் இம் முற்றவெளி மைதானத்தை கடைகள் அமைப்பதற்கு வழங்குவது பற்றி கலந்துரையாடப்படவில்லை. "நாங்கள் பயிற்சி செய்யும் இடத்தை பணத்திற்காக கொடுக்கிறார்கள். கடை போடுபவர்கள் விளையாடும் இடத்தை குன்றும் குழியுமாக ஆக்கி, விரும்பியபடி மாற்றி அமைத்துவிட்டு சென்று விடுவார்கள். எமது நகரத்தில் இருக்கும் விளையாட்டுக் கழகங்களின் நிலையையும் கவனத்தில் எடுத்துக்கொள்வார்களா?" என ஆதங்கத்துடன் கேட்கின்றனர் இவ் விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தவர்கள்.

**திருமலை செய்தியாளர் சக்தி**

# சிறுபான்மை மக்களின் உரிமைக்கும் அதிகாரத்திற்கும் உலைவைக்கும் திருத்தம்

**சிறுபான்மை மக்களின் உரிமைக்கும் அதிகாரத்திற்கும் உலைவைக்கும் உள்ளூராட்சி திருத்தச் சட்டத்தை மாகாணசபை உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான தோழர் இரா. துரைரத்தினம் சபை அமர்வின் போது ஆற்றிய உரையின் சுருக்கம்**

இலங்கையில் இருக்கின்ற அனைத்து உள்ளூராட்சி சபைகள் மாதிரி வடக்கு கிழக்கில் இருக்கின்ற உள்ளூராட்சி சபையை மத்திய அரசாங்கம் மதிப்பிடக்கூடாது. இதற்குரிய காரணம் இந்த உள்ளூராட்சி சபையை பொறுத்தவரையில் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இந்த உள்ளூராட்சி சபை செயல்வடிவம் என்பது சிறுபான்மை மக்களின் அதிகாரப்பரவலாக்கல், அதிகாரப்பங்கீடு என்பதுடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயம், கிழக்கு மாகாணத்தில் 1983ம் ஆண்டிலிருந்து 2004, 2005 ஆண்டுகள் வரையும் ஒரு ஜனநாயக சூழல் அற்ற நிலமையும், இன அழிப்புச் சூழல், ஆயுதவன்முறையாளர்களின் அத்துமீறல், ஜனநாயக விரோத செயல்பாடுகள் ஊடாகத்தான் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் 2004 க்குப் பிறகு வடக்கு கிழக்கு மாகாணம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு கிழக்கு மாகாணத்தில் பல கட்சிகள் உருவாக்கப்பட்டன. இக் கட்சிகள், இந்த கிழக்கு மாகாண மக்களின், சிறுபான்மை மக்களின் உரிமைகள் தொடர்பான பல விடயங்களை தங்களது கொள்கைகளுக்கு ஏற்றாற் போல முன்னெடுத்து இன்று அதனுடைய வளர்ச்சி மாகாணசபை வரையும் வந்து நிற்கின்றன.

கிழக்குமாகாணசபை ஆரம்பிக்கப்பட்டு கடந்த இரண்டரை ஆண்டு காலமாக இந்த மாகாண சபையில் ஆளும் தரப்புக்கு சார்பாக பல கட்சிகளும், எதிர்தரப்புக்கு சார்பாக பல கட்சிகளும் செயல்படுகின்றன. மாகாணசபை நிருவாகம் இரண்டரை வருடமாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. எமது கட்சியைப் பொறுத்தவரையில் கிழக்கு மாகாண நிர்வாகம் அதிகாரமுள்ளதாகவும் மிகவும் நல்ல நிர்வாகத் தலைமையிலும் ஊழல்கள் அற்ற முறையில் சிறுபான்மை மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்னும் குறிக்கோளுடன் எதிர்கட்சியில் தனிக்கட்சியாக இருந்து கொண்டு நல்ல விடயங்களுக்கு எதிர்கட்சி ஆளும்கட்சி என்று இல்லாமல் ஆதரவளித்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் ஒரு காலமும் சிறுபான்மையினருக்கு எதிராக துரோகம் விளைவிக்கும் எந்த விடயங்களுக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் அன்றும் சரி இன்றும் சரி ஆதரவு வழங்க மாட்டோம் என்ப தையும் மிகவும் உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே**

**மத்திய அரசின் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றேன்**

இந்த நேரத்தில் மத்திய அரசாங்கம் உள்ளூராட்சி சபைகளில் உள்ள, கிழக்கு மாகாண சபையில் இருக்கின்ற மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை, சிறுபான்மைக் கட்சிகளை அழைத்து ஆலோசனை பெறாமல் இந்த திருத்தச்சட்டத்தை முன்வைப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். குறிப்பாக இங்கு ஜனநாயகத்தன்மை பேணிப்பாதுகாக்கப் படவில்லை

கிழக்கு மாகாணம் என்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆளுகின்ற ஒரு சபை. இங்கு ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்கப்படவில்லை இப்படிப்பட்ட, இலங்கை அரசாங்கத்தின் ஜனநாயகத்திற்குப் புறம்பான செயல்களால் நாங்கள் மீண்டும் மீண்டும் ஜனநாயக ரீதியாக போராட நிர்ப்பந்திக்கப்படுகின்றோம் ,

எம்மை பொறுத்தவரையில் ஆயுத வன்முறைக்கெதிராகவும், அராஜகத்திற்கெதிராகவும், ஜனநாயக சூழலை ஏற்படுத்துவதற்கும், பன்முகத் தன்மையை உருவாக்குவதற்கும் நீண்ட பல வருடங்களாக, பல இழப்புக்களுக்கு மத்தியில் போராடியவர்கள் 1986ம் ஆண்டு 12ம் மாதம் 13ம் திகதியில் இருந்து இன்று வரை போராடியவர்கள் என்ற வகையில் ஜனநாயகத்தைக் கேட்டுத்தான் நாங்கள் புலிகளிடம் போராடினோம், அவர்கள் ஜனநாயகத்தை மறுத்தார்கள். பல அப்பாவி உயிர்கள் காவுகொள்ளப்பட்டன மனித நேய உதவியாளர்கள் கடத்தப்பட்டனர், பல கட்சித்தலைவர்கள் நாட்டைவிட்டு ஓடினார்க.ள் மீறியும் ஊரில் இருந்தவர்கள் தடம் தெரியாது புதைக்கப்பட்டனர், வடக்கு கிழக்கிலுள்ள பல நல்ல அதிகாரிகள் அச்சுறுத்தல் காரணமாக தலைமறைவானார்கள். ஜனநாயத்திற்காக போராடிய நற்பிரஜைகள், பிரதிநிதிகள் இல்லாதொழிக்கப்பட்டனர், எமது கட்சியும் நாங்களும் இந்த அராஜகப் போக்கை எதிர்த்தோம். ஜனநாயக விரோதச்செயல் என்று கூறினோம், ஆனால் எமது மத்திய அரசு இன்று என்ன செய்கின்றது

**கௌர சபாநயகர் அவர்களே!**

கிழக்கு மாகாணத்திலும் மாகாண சபையிலும் எவ்வளவோ அரசியல் கட்சிகள் இருக்கும் போது, உள்ளூராட்சி மன்றங்களில் பல கட்சிகள் வெற்றி பெற்று செயற்படும்போது, இக்கட்சிகள் ஜனநாயக ரீதியாகச் செயல்படுவதற்கான பல உரிமைகள் இருக்கின்றன. இந்நிலையில் உள்ளூராட்சி தொடர்பாக மத்திய அரசு அதாவது ஏற்கனவே முன்வைத்து உள்ளூராட்சி திருத்தச் சட்டத்தை இரண்டாவது தடவையாக மீண்டும் முன்வைத்துள்ளது முதலாவது தடவையாக இச் சட்டதிருத்தம் கிழக்குமாகாண சபையில் முன்வைக்கப்பட்ட போது சட்டத் திருத்தத்திற்கு சார்பாக யாரும் வாக்களிக்காது திருப்பி அனுப்பப்பட்டன.

எனவே பல பிரச்சினைகள் இருக்கின்றன என்று மத்திய அரசிற்குத் தெரியும். எங்களை விடவும், கௌரவ முதலமைச்சர், ஏனைய அமைச்சர்கள், ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகள், தேசியக்கட்சிகள் அவர்களுடன் சேர்ந்து இந்த விடயங்களை அலசி ஆராய்ந்திருந்தால், இந்த அரசு சிறுபான்மை மக்களின், கட்சிகளின் பெருமைக்குரியதாகியிருக்கும் பல விடயங்கள் திருத்தியமைக்கப்பட்டிருக்கும்,



அதாவது நகர அபிவிருத்தி அதிகார சபையில் (UDA) இருந்து நிறைய அதிகாரங்கள் மாநகரசபைக்கு வழங்கப்பட வேண்டியிருக்கின்றன. அதிக பணம், அதிக வருமானங்கள் மத்திய அரசுக்கு செல்கின்றன.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக மாநகர சபைக்கு ஒரு பொலிஸ் பிரிவை மத்திய அரசால் வழங்க முடியும், மற்ற நாடுகளில் இருக்கின்றன. ஏன் இங்கு, எமது நாட்டிலும் கூட இருக்கின்றது. இந்த சம்பிரதாயம் மாநகர தெரு ஒழுங்கு பொலிசாரைக் கூட அனுமதிக்கவில்லை. வீதியை பார்க்கும் போது மிகவும் தெளிவாக தெரியவருகின்றது வீதிகள் அழகாக இருக்கின்றன. என்ன செய்வது கிழக்கு மாகாண சபைக்கே பொலிஸ் அதிகாரம் இல்லை, எவ்வாறு மாநகருக்கு பொலிஸ் அதிகாரத்தைக் கொடுப்பார்கள் ஆனால், பல விடயங்களை தெளிவாகச் செய்திருக்க முடியும். ஏன் செய்யவில்லை என்பது தான் என் கேள்வி.

கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறுபான்மை ஆளும் தரப்புக் கட்சிகள் அரசு சார்பான கட்சிகள் பலவீனமாக இருக்கின்றனவா? அல்லது எதிர்க்கட்சி சார்பான கட்சிகள் பலவீனமாக இருக்கின்றனவா?

ஒரு சபையில் ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் இருப்பதற்கான காரணம் நான் நினைக்கின்றேன் இங்கு பலர் அரசியல் பேசுகின்றார்கள். நல்ல விடயங்களை அரசியல் ஆக்குகின்றார்கள். அது எனக்கு ஏற்புடையதல்ல மிகநல்ல விடயங்களை பொதுக் கொள்கைகளை தெளிவாக நாங்கள் பேசவேண்டும். எங்கு சென்றாலும் நாம் அரசியல் சண்டைக்கு செல்வது பொருத்தமானதல்ல உள்ளூராட்சி சபை சட்ட சீர்திருத்தம் மத்திய அரசால் முன்வைக்கப்பட்டுள்ளது சிறுபான்மை கட்சிகள் சரியான ஒரு முடிவை எடுக்க வேண்டும். அதில் நாங்கள் சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படாவண்ணம் தெளிவான ஒரு முடிவினை எடுக்க வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில் மீண்டும் பல ஆண்டுகளுக்குப் பின் ஒரு ஆயுதப் போராட்டம் வளர்வதற்கு உள்ளூராட்சிசபை சட்டத் திருத்தம் வழிவகுக்கக் கூடாது உள்ளூராட்சிச் சபை எதிர் காலத்தில் கிழக்கு மாகாண சபையிடம் அதிகாரம் கேட்கப் போகின்றன உள்ளூராட்சி சபைகள் வளர வளர கிழக்கு மாகாண சபை பல அதிகாரங்களை உள்ளூராட்சிக்கு ஆனுமதிக்க வேண்டும். அதே போல மாகாணசபையும், மத்திய அரசாங்கத்திடம் நாங்கள் அதிகாரம் கேட்க வேண்டிய நிர்ப்பந்தமும், நெருக்கடியும் நமக்கு இருக்கின்றன. இதுதான் இண்றைய யதார்த்தம்

சிறுபான்மை மக்களோடு சம்பந்தப்பட்ட எந்த விடயங்களும் உடனடியாக மத்திய அரசால் முடிவெடுக்கப்படமாட்டாது.

பொலிஸ் அதிகாரங்கள் இல்லை, குறிப்பிடத்தகுந்த எந்த அதிகாரமும் எங்களுக்கு இல்லை. மத்திய அரசாங்கத்தின் தேவை கருதி விரைவாக முடிவு எடுப்பது என்பது ஒரு கேள்விக் குறியான விடயம். ஆகவே, எதிர்காலத்தில் மத்திய அரசாங்கம் ஒரு தீமானத்தை கிழக்கு மாகாணசபை நிருவாகத்தோடு சம்பந்தப்பட்ட விடயங்களை தீமானிப்பதாக இருந்தால் அவர்கள் சிறுபான்மை மக்கள் மீது அக்கறையானவர்களாக இருந்தால் அவர்கள் இங்குள்ளவர்களுடன் அதாவது சிறுபான்மை கட்சிகளுடன் பேசித் தீர்மானிக்க வேண்டும்.

**தேசிய எல்லை நிர்ணயக்குழு அமைப்பது தொடர்பான திருத்தம்**

எல்லை நிர்ணய ஆணைக் குழுவிற்கான பிரதிநிதிகளை தெரிவு செய்யும் முழுப் பொறுப்பும் ஒரு அமைச்சரின் கையிலேயே இருக்கிறது. இந்த ஆணைக் குழுவை அமைச்சா் நியமிப்பார் எனச் சொல்லப்பட்டது. எப்படி நியமிப்பார்? யார் யார் இதில் அங்கம் பெற வேண்டும் என்பது சுட்டிக் காட்டப்படவில்லை எனவே சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் முஸ்லிம் மக்கள் மலையகத் தமிழர்கள் ஏனைய தமிழர்கள் என 3 வகைப் பட்டுள்ளனர். 3 வகையினரையும் உள்ளடக்கியதாகவும் நடுநிலையாளர்களை சேர்த்துக் கொள்ளக் கூடியவாறும் இந்த ஆணைக் குழு அமைக்கப்பட வேண்டும் இவைகளை உள்ளடக்கியதாக திருத்தம் அவசியம்.

நான் உதாரணத்திற்கு சொல்லுகின்றேன் சிறுபான்மை தமிழர்கள் என்று நான் மேலே வகைப்படுத்திக் காட்டியது இலங்கையில் மூன்று வகையான சிறுபாண்மையினர் இருக்கின்றனர். உள்ளூராட்சி தொடர்பாக கடந்த காலத்தில் பல முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன இந்த முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டுமானால் பல விடயங்களுக்கு இவர்களது கருத்துக்களும் முடிவுகளும் அவசியம் இவர்களது கருத்துக்கள் தங்களது சமூக நலன் சார்பாகத் தான் இருக்கும்

**எல்லை நிர்ணையம் செய்யும் மாவட்டக் குழு தொடர்பான திருத்தம்**

இந்த மாவட்டக் குழு முழுமையாக அதிகாரிகளை உள்ளடக்கியதாகவே இருக்கின்றன இதில் சகல திணைக்களங்களை சேர்ந்தவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்

இதேவேளை மாகாணசபையின் பங்களிப்பு தொடர்பாக ஒரு அதிகாரி மட்டும் மாகாண மட்டத்தில் இடம்பெறமுடியும் என சில வாக்கியங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஏனைய அதிகாரிகள் அனைவரும் மத்திய அரச அதிகாரிகளை நியமிப்பதற்குரிய முறைகளே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது குறிப்பாக அம்பாறை, திருகோணமலை மாவட்டத்தில் நிலைமையை பாருங்கள் இரண்டு மாவட்டத்திலும் பெரும்பான்மையினரே அதிகாரிகளாக இருக்கின்றனர் இவை மட்டுமின்றி இக்குழுக்களில் உள்வாங்கப்படப் போகின்ற மத்திய திணைகளங்களை பார்ப்பீர்களேயானால் நிலஅளவை திணைகளம், புள்ளிவிபரத் திணைகளம், மதிப்பீட்டுத் திணைக்களம், காணித்திணைகளம் இந்த திணைகளங்களில் சிறுபான்மையினரே அதிகாரிகளாக உள்ளனர். சந்தேகங்களோடு பார்க்க வேண்டியுள்ளது. எனவே மாகாண அதிகாரிகள் குறைந்தபட்சம் இருவரையேனும் உள்வாங்க வேண்டும். இவை மட்டுமின்றி மக்கள் பிரதிநிதிகள் ஏன் உள்வாங்கப்படவில்லை. பாராளுமன்றம், மாகணசபை, உள்ளூராட்சிசபை மக்கள் பிரதிநிதிகள் சிவில் அமைப்புக்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இவைகளைக் கருத்தில் கொண்டு மாகாண சபைக்குரிய அதிகாரிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கக் கூடியவண்ணம் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். ஒரு அதிகாரியை தவிர 4 அதிகாரிகளும் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சற்றுச் சிந்தியுங்கள் அப்படியொரு குழு கிழக்கு மாகாணத்திற்குத் தேவையா? மத்திய அரசாங்கம் 4 அதிகாரிகளை நியமித்துவிட்டு கிழக்கு மாகாணத்தில் ஒரேயொரு அதிகாரியை நியமிக்கப் போகின்றார்கள் .நீங்கள் சம்மதிக்கப் போகின்றீர்களா? என்று நான் உங்கள் அனைவரையும் கேட்க விரும்புகின்றேன்

கௌரவத்துக்குரிய மக்கள் பிரதிநிதிகள் யாரும் தயவு செய்து கோபமடையக் கூடாது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகள் யார்? அதே போல திருகோணமலையில் இருக்கின்ற மத்திய அரசாங்க அதிகாரிகள் யார்? நான் பேசும் தொனி என்பது சிறுபான்மையின மக்களின் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான தொனி இதை யாரும் இனவாதமாகக் குறிப்பிடக் கூடாது.

இந்த இரு மாவட்டங்களிலும் உள்ள மத்திய அரச திணைகளங்களிலும் உள்ள உயர் அதிகாரிகள் யார் பலர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள், நான் சந்தேகப்படுகின்றேன் என நினைக்கக்கூடாது, ஆனால் நீங்கள் சந்தேகிக்கப்பட வைத்து விட்டீர்கள் 10 நாட்களுக்குள் இதை நிறைவேற்றி அனுப்புமாறு மாண்புமிகு ஜனாதிபதி உங்களுக்கு பணிப்புரை விட்டதாக பலர் கூறுகின்றனர்

**கொரவ சபாநாயகர் அவர்களே!**

இலங்கைக்குள் ஆளும் தரப்பினருக்கு இந்த விடயம் வேறு மாவட்டங்களில் பொருந்தும். ஏன் எதிர்தரப்பினரும் ஆதரித்து வேறு மாவட்டத்தில் வாக்களித்துள்ளனர். குறிப்பாக, ஜக்கிய தேசிய கட்சி இங்கு இரட்டைவேடம் போடக் கூடாது ஏன் முஸ்லீம் காங்கிரசும் கூட மௌனம் சாதிக்கிறது

ஏனைய மாவட்டங்களில் அங்கு பெரும்பான்மையான ஒரு சமூகம் வாழ்கின்றது. அங்கு வேறு இங்குவேறு இது சிறுபான்மை மக்களின் பிரதேசம் எனவே நாங்கள் ஒரு வெளிப்படைத் தன்மையை காட்ட வேண்டும். கிழக்கு மாகாண சபையைச் சேர்ந்த அதிகாரிகள் குறைந்தது 2 பேராவது இக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

அதே நேரத்தில் அந்தந்த மாவட்டத்தில் இருக்கின்ற மாகாண அரசின் அதிகாரிகள் உள்வாங்கப்பட வேண்டும். அத்துடன் நாம் அனைவரும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள். மாவட்டம் தோறும் மக்கள் பிரதிநிதிகளின் அபிப்பிராயங்களும் உள்வாங்கப்பட வேண்டும். அதிகாரிகளை வைத்துக்கொண்டு 20 வருடமாக வடகிழக்கு மாகண அரசை மத்திய அரசு கையாண்டது.

அனால், மக்களாட்சிக்குரிய அதிகாரம் குறைக்கப்பட்டனவே. அது உள்ளூராட்சி சபையாக இருக்கலாம், கிழக்கு மாகாண சபையாக இருக்கலாம், பாராளுமன்றமாக இருக்கலாம் அந்த வகையில் திருத்தங்களை செய்வதற்கு மாவட்டம் தோறும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்கள் அவசியம் என திருத்தங்களை கொண்டுவர வேண்டும்

*(தொடர்ச்சி 6 ம் பக்கம் பார்க்க)*

# தமிழ் கட்சிகளின் அரங்கம் கடமையும் பொறுப்பும்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண தமிழ் அரசியல் சக்திகள் குறைந்தபட்ச கருத்தொருமைப்பாட்டுடன் செயற்பட முன்வராவிட்டால் வாழும் சந்ததியும் வருங்காலச் சந்ததியும் நம்மை தூற்றும்

தமிழ் கட்சிகளின் அரங்கத்தின் பிரதான இலக்கு இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஒருமித்த நிலைப்பாடொன்றை எய்துவதே.

கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக நிலவும் இனப்பரச்சனைக்கு தீர்வை எட்டுவதில் இருந்த பிரசினை தமிழ் கட்சிகள் இயக்கங்களிடையே ஒருமித்த நிலைப்பாடொன்று இல்லாததுமே.

மாறிமாறிப் பதவிக்கு வரும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுடன் விளையாடியது ஒரு புறமிருக்க, தமிழர்களிடையே இருந்த ஏகபிரதிநிதித்துவம் என்ற தலைமைத்துவப் பிரச்சினை தமிழ் சமூகத்தின் மத்தியிலும், சகோதர சமூகங்கள் மீதும், அண்டை நாட்டிலும் ஏற்படுத்திய அனர்த்தங்கள் வரலாறு ஏகபிரதிநிதித்துவம் சிதைவுக்குள்ளாகி ஒரு வட்டம் சுற்றியாயிற்று. இப்போது நாம் வீழ்ந்து கிடக்கிறோம். எனினும் கலந்துரையாடுவதற்கும், செயற்படுவதற்குமான இடைவெளி காணப்படுகிறது. எனவே இந்த இடைவெளியில் நாம் ஆக்கபூர்வமாக இயங்க வேண்டும்.

மற்றைய எமது தனிப்பட்ட பிரச்சனைகள் கோபதாபங்களை ஒதுக்கி வைத்துவிட்டு இனப்பிரச்சனை தீர்வு தொடர்பில் ஒரு தீர்வுக்கு வருவதற்கு ஒன்று படுவோம்.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காண தமிழ் அரசியல் சக்திகள் குறைந்தபட்ச கருத்தொருமைப்பாட்டுடன் செயற்பட முன்வராவிட்டால் வாழும் சந்ததியும், வருங்காலச் சந்ததியும் நம்மைத் தூற்றும்.

இனிமேலும் இனப்பிரச்சனை தொடர்கதையாக அனுமதிக்க முடியாது.

இதேபோல் வன்னிமக்களின் மீள் குடியேற்றம், கடந்த 20 வருடங்களாக இடம்பெயர்ந்து வாழும் மக்களின் மீள் குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், கண்ணிவெடிகளை அகற்றுதல், அனாதரவானோர் விதவைகள் ஊனமுற்றோர் வாழ்வில் நம்பிக்கைளை ஏற்படுத்துதல், தொழில் உளவள கல்விச் சூழ்நிலைகளை ஸ்தாபித்தல் புனர்வாழ்வு முகாம்களிலும் சிறைகளலுமுள்ளோர் சமூகத்தில் இணைந்து வாழ்வதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துல். இராணுவமயப்பட்ட சூழ்நிலை அகன்று ஜனநாயக மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு பாடுபடுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இருக்கின்றன.

சமூகங்கிளிடையே புரிதலை ஏற்படுத்துதல், அச்சமின்றி வாழ்தல், சமூகபொருளாதார அபிவிருத்தி, நிம்மதியான வாழ்வை ஏற்படுத்துதல் என்பன இருக்கின்றன. இந்த வகையில் தமிழ் கட்சிகளின் அரங்கத்திற்கு பாரிய பொறுப்பு உண்டு.

அதேபோல் தென்னிலங்கையில் சமூகங்களிடையே அதிகாரப்பகிர்வில் நம்பிக்கையுள்ள, அதனூடாவே நாட்டில் விமோசனம் ஏற்படும் என நம்பும் சக்திகள் ஜனநாயகத்திற்காக நலிவுற்றோருக்காக குரல் கொடுக்கும் சக்திகளுடனும் நாம் கரங்கோர்த்து செயற்பட வேண்டும்.

இலங்கையின் அரச முறைமையில் தமிழர்கள் பங்குதாரர்கள் ஆக்கப்படுவதும், ஆக்கிரமிப்பு வகைப்பட்ட குடியேற்றங்கள் கலாச்சார ஊடுருவல்களுக்கு முடிவு கட்டுவதும் அவசர அவசியமான விடயங்களாகும்.

சட்டம் ஒழுங்கு, நிலம் உள்ளிட்ட அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதும், பாரம்பரிய பிரதேசம் என்ற நம்பிக்கைகளை பலவந்தமாக சிதறடிக்கும் விதமான செயற்பாடுகள் தடுக்கப்படுவதும், இவை எல்லாவற்றையும் தகுந்த முறையில் நட்புணர்வுடன் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு எடுத்துரைப்பதும், செயற்படுவதும் தமிழ் அரங்கத்தின் கடமை ஆகும்.

**திருநாவுக்கரசு ஸ்ரீதரன்**

# சிறுபான்மை மக்களின் உரிமைக்கும் அதிகாரத்திற்கும் உலைவைக்கும்..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

**வட்டாரங்கள் பிரிப்பு (எல்லை நிர்ணயம்) திருத்தம் அவசியம்**

இந்த எல்லை நிர்ணயம் செய்யப்படும் போது அந்தந்த வட்டாரப் பகுதிக்குள் இருக்கின்ற சிறுபான்மை இனங்களின் விகிதாசாரத்திற்கேற்ப பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். வட்டார ரீதியாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களில் குறைவு ஏற்படுமாயின் விகிதாசார ரீதியாக சிறுபான்மை உறுப்பினர்களை உள்வாங்கக் கூடியவாறு எல்லைகள் பிரிக்கப்பட வேண்டும். இதை உறுதிப்படுத்தக் கூடியவாறு இத்திருத்தம் அமைய வேண்டும்.
நாங்கள், இந்த வட்டார எல்லையைப் பிரிப்பது என்பது கண்டிப்பாக ஒவ்வொரு சமூகமும் வட்டார எல்லையைப் பிரிக்கும்போது தனக்குச் சார்பாகத்தான் செயற்படுகின்றது, இதுதான் யதார்த்தம். அந்த வேளையில் அங்கு வசிக்கும் ஏனைய சமூகங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

இந்த எல்லை நிர்ணயம் செய்யப்படும் போது அங்கு மிகவும் குறைந்தளவிலான சிறுபான்மையினர் இருந்தால் இவர்கள் பெரும்பான்மையாக எங்கு இருக்கின்றார்களோ அவர்களுடன் சேரக் கூடியவாறு நிருவாக எல்லை பிரிக்கப்பட வேண்டும். அப்படியில்லாத பட்சத்தில் எதிர்காலத்தில் நிறைய பிரச்சினைகளை நாங்கள் சந்திக்க வேண்டி ஏற்படும்.

**5 வீதத்திற்கு குறைவான வாக்குகள் நீக்கப்படுவது தொடர்பாக**

வட்டார ரீதியாக தேர்தல் நடக்கும் போது 5 வீதத்திற்கு குறைவாக வாக்குகளை எடுத்தால் அது நீக்கப்படும் எனச் சட்டத் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுபான்மையினர் என்று வரும் போது பல வட்டாரங்களில் சீறுபான்மையினர் இருக்கின்ற பகுதிகளில் 5 வீதத்திற்குக் குறைவாக வாக்கு எடுப்பதற்கு பல சந்தர்ப்பங்கள் உள்ளது. இவை மட்டுமின்றி எமது மாகாணசபைத் தேர்தல் முறையில் கூட இந்த 5 வீத வெட்டுப்புள்ளி முறைமை இல்லை. எனவே, 5 வீதம் வெட்டுப்புள்ளி முறைமை முற் றாக நீக்கப்பட வேண்டுமென திருத்தங்கள் கொண்டுவர இச்சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைத் திருத்தினால் மட்டுமே சிறிய கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் ஓரம்கட்டும் சதியை உடைத்தெறிய முடியும். 5 வீதத்திற்கும் குறைவாக வாக்குகள் எடுக்கப்பட்டிருந்தால், அது நீக்கப்பட வேண்டுமென முதலமைச்சர் அவர்களும் கூறியிருந்தார். நான் உங்களிடம் கேட்கின்றேன் கிழக்கு மாகாணத்தில் நாங்கள் யாரும் தேசியக்கட்சி இல்லை தானே? தென்னிலங்கை பகுதியில் JVP கட்சி எவ்வாறு மக்கள் பிரதிநிதியாக வந்தது? நான் கூறுகின்றேன் ஒரு சமுகத்தில் ஜனநாயக ரீதியான வளர்ச்சி, அரசியல் ரீதியான வளர்ச்சி, மனித உரிமை வளர்ச்சி, அபிவிருத்தி வளர்ச்சி என சகல வளர்ச்சிகளும் உருவாக்கப்படும் போது ஒருவனுக்கு தேர்தல் கேட்பதற்கான உணர்வுகளும், ஜனநாயக உரிமைகளும் உண்டு. அவன் சாதி ரீதியாக சேர்ந்தாலும் சரி, சமுக ரீதியாகச் சேர்ந்தாலும் சரி. இன ரீதியாகச் சேர்ந்தாலும் சரி குறிப்பிட்ட அந்த மக்களின் செல்வாக்கைப் பெற்றவனாக இருந்தும் 5 வீத வெட்டுப்புள்ளியை நாங்கள் போட்டு ஒரு தடுப்புச் சுவரை ஏற்படுத்தினால், அவனுடைய ஜனநாயக உரிமை பறிக்கப்படுகின்றது. அது மட்டுமல்ல கிழக்கு மாகாணத்தில் நாங்கள் சிறுபான்மைக் கட்சிகள் பல இடங்களில் 5 வீதமாக வாக்களிக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆகவே 5 வீத வெட்டுப்புள்ளி என்பது தட்டிப்பறிப்பது என்பதாகும். .

**70 வீதம் 30 வீதம் விகிதாசாரம்**

இந்தப் புதிய திருத்தச்சட்டம் தொடர்பாக பொதுவாக பலராலும் புரிந்து கொள்ளப்பட்டிருப்பது என்னவெனில் உள்ளூராட்சியில் உள்ள ஒரு சபையில் உள்ள மொத்த உறுப்பினர்களில் 30 சதவீதம் (உ-ம் 10 பேரில் 3 பேர்) என்றே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்தச் சட்டப் பிரேரணைப்படி மொத்த உறுப்பினர்கள் 13 பேராக இருந்தால் அதில் 10 பேர் வட்டார ரீதியாக தெரிவு செய்யப்பட்டவர்களாகவும் 3 பேர் மட்டும் விகிதாசார முறையில் வருகின்றவர்களாகவும் இருகின்றது. இவ்வாறாக இருக்கின்ற இந்த குழப்பங்களை நீக்கி ஒரு சபைக்கான மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் அதாவது 3 வீதத்தினர் அதாவது 10 பேர் வட்டாரரீயக தேர்தெடுக்கப்பட்டால் 3 பேர் விகிதாசார ரீதியாக தேர்தெடுக்கப்பட வேண்டும் என்று திருத்தப்பட வேண்டும்.

**சிறுபான்மையினரின் தெரிவு தொடர்பாக**

உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறை வட்டார ரீதியாக 70 வீதமும் விகிதாசார ரீதியாக 30 வீதமும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சிறுபான்மை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் போது விகிதாசாரம் 30 வீதம் கண்டிப்பாக நடைமுறைபடுத்தப்படும் எனச் சொல்லப்படுகின்றது. இதில் அதிக வாக்குகளைப் பெறும் கட்சி அந்த வட்டாரத்தில் விகிதாசார முறையில் உறுப்பினர்களை தெரிவு செய்யும் போது யார் சிறுபான்மையினராக இருக்கின்றனரோ அந்த இனசமூகம் சார்ந்தவரையே அந்தக் கட்சி பிரதிநிதியாக தெரிவு செய்ய வேண்டும். இதை சட்ட ரீதியாக உறுதிப்படுத்த திருத்தம் தேவை.

**மாநகரசபையை கலைத்து ஆணையாளர் அதிகாரத்தில் விடுவது**

மாநகரசபையின் முதல்வர் வரவுசெலவு திட்டத்தை நிறைவேற்றமுடியாவிடின் இராஜினாமா செய்யவேண்டும். இரண்டாவது தடவையாகவும் நிறைவேற்றாவிடின் மாநகரசபை கலைக்கப்பட்டு ஆணையாளர் ஆட்சிபுரிய வேண்டும். இது ஏற்படையதல்ல அரசியல்சபை கலைக்கப்பட்டால் குறித்த மாநகரசபை தேர்தல் 6 மாதத்திற்கிடையில் அல்லது குறிப்பிட்ட மாத காலத்தில் நடத்தப்பட வேண்டும் என திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாவிட்டால் மேயர் இராஜினாமா செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல அந்த குறிப்பிட்ட காலப்பகுதியில் ஆணையாளரின் ஆட்சி இதுவும் ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு ஆட்சி வடக்கு -கிழக்கு மாகாணசபை 90 ம் ஆண்டுகளில் கலைக்கப்பட்டு 20 ஆண்டுகளின் பின் வடக்கு- கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டு மத்திய அரசின் ஆட்சி நேரடியாக இருந்த காலகட்டத்தில் 20 வருட காலகட்டத்திற்குள் அரசியல் சபை இருந்திருந்தால் எவ்வளவு விடயங்களை நாங்கள் நிறைவேற்றியிருக்க முடியும். (உ-ம்) ஏனைய மாகாணசபை 40 க்கு மேற்பட்ட நியதிச் சட்டத்தை உருவாக்கி உள்ளன. நாங்கள் தற்சமயம் 4 மட்டும் உருவாக்கியிருக்கின்றோம். எந்தச் சபையாக இருந்தாலும் சரி தமிழ் மக்கள் இருக்கிற சபை அதிகாரங்களுடன் இருக்க வேண்டும். எமது பிரச்சனைகளை ஜனநாயகரீதியாக பேசுவது எமது உரிமை அரசியல்சபை மக்களின் பிரச்சினைகளை பேசுவதற்கான தளம். நாம் அந்த உரிமையை இழந்து விட முடியாது.

**கௌரவசபாநாயகர் அவர்களே!**

6 மாதத்தில் மாநகரசபை கலைக்கப்பட்டு விட்டது என வைத்துக்கொள்வோம். மிகுதி 3 வருடமும் 6 மாதமும் இருக்கின்றன. மீதி காலகட்டத்தில் ஆட்சியை மாநகர ஆணையாளரிடம் கொடுத்து விட்டால் அங்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லை, ஜனநாயகக்களம் இல்லை பேசுவதற்கான சந்தர்ப்பம் இல்லை.

ஆகவே ஆணையாளரின் பொறுப்பில் வழங்காமல் கலைத்துவிட்டு ஆணையாளரின் ஆட்சியில் குறைந்தது 6 மாதம் அதற்கிடையில் மீண்டும் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும். அது இல்லாத பட்சத்தில் ஜனநாயகத்திற்கு சாவுமணி. நாங்கள் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது மட்டுமல்ல அந்த இடைப்பட்டகாலத்தில் உள்ள பொறுப்புக்கள் அனைத்தும் மாகாணசபைக்கு வழங்கப்பட வேண்டும். உள்ளூராட்சியில் பல தரப்பட்ட அதிகாரங்கள் கிழக்கு மாகாணசபைக்கு இருக்கின்றன. அதைப் பராமரிக்கின்ற பொறுப்பு கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். வடக்கின் பூரண அதிகாரமும் யாரிடம் இருக்கின்றது. அது மத்திய அரசிடம் தான் இருக்கின்றது.

ஆகவே எதிர் காலத்தில் இந்த உள்ளூராட்சி தொடர்பில் கிழக்கு மாகாணசபை இதில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். ஆளும் கட்சிக்கு பல தரப்பட்ட தேவைகள், பிரச்சினைகள், நெருக்கடிகள் இருக்கின்றன. ஒரு அமைச்சர் என்னிடம் மிகவும் மனவருத்தத்துடன் பேசினார். ஏனென்றால் நாங்கள் சிறுபான்மையினர்கள், வேறொரு நாட்டுக்குச் சென்று எம்மால் வாழமுடியாது 8 லட்சம் வட கிழக்கை சேர்ந்தவர்கள் வெளிநாடுகளில் வாழுகின்றார்கள். இவ்வாறு தான் எமது உரிமையை இன்று ஜனநாயகத்தைப் பேசிப்பெற வேண்டியிருக்கின்றது.

ஒரு மத்திய அரசு தன் தேவைகளையும் மக்களின் தேவைகளையும் நிறைவேற்ற சில சமயங்களில் தவறுகின்றது. சட்ட திருத்தத்தை மேற்கொள்கின்றது. அது மத்திய அரசின் கடமை. அதே போல் தான் சிறுபான்மையினராகிய எங்கள் கட்சிக்கும் சில கடமைகள் உண்டு. எனவே, நாங்கள் அனைவருடனும் சேர்ந்து சரியான திருத்தத்தை மேற்கொள்வோம். இந்த திருத்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்க, நான் தீர்மானித்தமைக்குக் காரணம் மத்திய அரசுக்கு பெண்ணை ஆணாகவும் ஆணைப் பெண்ணாகவும் மாற்ற முடியாதே தவிர சகல அதிகாரங்களும் உண்டு. இந்த நேரத்தில் கூட சிறுபான்மையினருக்கு அதிகாரத்தை வழங்க முடிவெடுக்க முடியும். இந்த அரசுக்கு இதைவிட வேறு சூழல் தேவையா?

இவ்வாறான வாய்ப்புக்களை இலங்கையிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மத்திய அரசு பயன்படுத்த வேண்டும். முடிவெடுக்க இது ஒரு நல்ல தருணம். கடந்த காலங்களில் 30 வருடங்களில் நாங்கள் பல சேவைகளை செய்திருக்க முடியும். தமிழ் மக்களின் கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் அங்கு பல பிரச்சினைகள் இருக்கும், ஆனால் சிங்களப் பிரதேசங்களில் பிரச்சினைகள் அப்படி இல்லை. ஏனெனில் உள்ளூராட்சிகளின் கட்டமைப்பு அங்கு நிருவாக ரீதியாக சமூகத்துடன் சேர்ந்திருக்கும்.

இன்று சிறுபான்மையினராகிய எங்களுக்கு 3 மேடைகள் உள்ளன

1. **பாராளுமன்றம்** - இங்கு சிறுபான்மையினர் தமது பிரச்சினைகளை கூறுவதற்கான சூழல் இருக்கின்றது, ஆனால், சிறுபான்மையினரின் பிரேரணை ஒன்று வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிக மிக அரிதாகவே காணப்படுகிறன.

2. **மாகாணசபை** – வடக்கு கிழக்கு மாகாண சபையில் சிறுபான்மையினம் பெரும்பான்மையாகக் காணப்படுகின்ற காரணத்தால் இங்கு அவர்களால் சட்டதிட்டங்களை உருவாக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

3. **உள்ளூராட்சி சபை** – உள்ளூராட்சி சபையானது சிறிய சிறிய சட்டங்களை உருவாக்க வாய்ப்பளிக்கின்றது.

ஆகவே, மாகாணசபை, உள்ளூராட்சிசபை ஆகிய இந்த இரண்டு சபைகளிலும் சிறுபான்மையினரான நாங்கள் ஆட்சி செலுத்தப் போகின்றோமா? அல்லது விடப்போகின்றோமா ?
இப்போதைக்கு மாகாணசபை, உள்ளூராட்சி சபை ஆகிய இந்த இரண்டு சபைகளின் மூலமே சிறுபான்மையினர் இலங்கையில் அதிகாரத்துடன் வாழமுடியும். நாங்கள் மத்திய அரசுடன் இணைந்தாலும், சிறுபான்மை இனம் பெரும்பான்மையான இனமாக மாறமுடியாது எதிர்க்கட்சியாகவும் முடியாது. அத்துடன் மாகாண சபையும் உள்ளூராட்சி சபையும் எமக்குள்ள வாய்ப்புக்கள். இதை நாங்கள் நன்றாகப் பயன்படுத்த வேண்டும். நாங்கள் சிறுபான்மை மக்கள் வாக்களித்து தெரிவு செய்யப்பட்வர்கள். அத்துடன் தேர்தல் காலத்தில் வீடுவீடாகச் சென்று உங்கள் உரிமையைப் பெற்றுத்தருவோம் என்றும் ஜனநாயகத்தை கட்டிக்காப்போம், மனித உரிமையை மதிப்போம், அதிகாரப் பங்கீட்டை விட்டுக்கொடோம் என்றும் இன்னும் எத்தனையோ விடயங்களைக் கூறி வாக்குகளைப் பெற்றவர்கள். 30 வருடங்களை தாண்டியும் போராளியாக இருந்து மக்கள் மத்தியில் போராட்டம், புரட்சி என்னும் நம்பிக்கையை கொடுத்து இந்த மக்களிடம் இருந்த சகல வளங்களையும் போராட்டம் என்னும் பெயரால் பயன்படுத்தி இவை அனைத்தையும் பெற்று வாக்குகளையும் பெற்று, மக்கள், உரிமை பெற்றுத்தருவார்கள் என்று எம்மை நம்பி இருக்கும் போது நாம் எவ்வாறு திருத்தத்தை ஆதரிப்பது எனவே இதற்கு எதிராக வாக்களிப்பதாக நான் தீர்மானித்துள்ளேன். சிறுபான்மை மக்களின் உரிமைக்கு உலை வைக்கும் திருத்தத்திற்கு எந்த சிறுபான்மை தமிழர்களும் வாக்களிக்க மாட்டார்கள் என நான் நம்புகின்றேன்
எமது சிறுபான்மை மக்களின் உரிமைக்கும் அதிகாரத்துக்கும் உலைவைக்கும் திருத்தத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன் ●

# காந்தி : இந்தியா – அமெரிக்காவுக்கான உறவுப்பாலம்

**திமோதி ஜே. ரோமர்**
**(இந்தியா டுடே, அக்டோபர் 13, 2010)**

மார்டின் லூதர் கிங்குக்கு மகாத்மா காந்திதான் வழிகாட்டி. ஒத்துழையாமை இயக்கம் பற்றிய அவரது பயிற்றுவித்தலே. அமெரிக்காவில் சிவில் உரிமை இயக்கத்துக்கு அடித்தளமாக இருந்தது.

இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவராக நான் பொறுப்பேற்ற பிறகு என்னால் மறக்க முடியாத முக்கியமான அனுபவம் கடந்த வருடம் ராஜ்காட்டில் மகாத்மா காந்தியின் ஜெயந்தி விழாவில் பங்கேற்றதுதான். அப்போது கிட்டத்தட்ட 20 மதங்களை சேர்ந்த பிரதிநிதிகள் பிரார்த்தனை பாடல்களையும் மதப் பாடல்களையும் பாடியதை கேட்டேன். காந்திஜிக்கும் அவர் வலியுறுத்திய இந்தியாவுக்கு அவர் எடுத்துச் சொன்ன மதிப்பீடுகளுக்கும் இதைவிட சிறந்த அஞ்சலி வேறு இருக்க முடியாது. சமத்துவம், சகிப்புத்தன்மை, மதச்சுதந்திரம் போன்ற கொள்கைகளும், அவற்றின் உண்மைகளும் அந்த இரண்டு மணி நேர நிகழ்ச்சியில் நன்கு வெளிப்பட்டன.

அமெரிக்கா, இந்தியா- காந்திஜி - இந்த மூன்று அம்சங்களும் ஒன்று மற்றொன்றின் மீது செலுத்திய தாக்கம் நீண்ட வரலாறு உடையது. அமெரிக்கா மீது கடந்த காலத்திலும் தற்காலத்திலும் காந்திஜி செலுத்திவரும் தாக்கம் என்பது அளவிட முடியாதது. மதிப்பிட முடியாதது. அளப்பரியது. டாக்டர் மார்டின் லூதர் கிங் ஜூனியருக்கு காந்திஜிதான் வழிகாட்டி ஒத்துழையாமை இயக்கம் பற்றிய காந்திஜியின் கற்பித்தல்கள் தான் அமெரிக்காவில் சிவில் உரிமை இயக்கத்துக்கு அடித்தளமாக அமைந்தன. இந்தியாவுக்கு வந்திருந்தபோது டாக்டர் கிங் கூறியது போல, "ஒடுக்கப்பட்ட மக்கள் நீதி மனித கௌரவத்தை மீட்டெடுப்பதற்கு அகிம்சை முறையிலான எதிர்ப்புத் தான் மிகவும் சக்தி வாய்ந்தது என்பதை முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்தியாவில் இருக்கும் இந்த நேரத்தில் புரிந்து கொண்டேன். உண்மையில் பிரபஞ்சத்தின் ஒழுக்க கட்டமைப் பில் இயல்பாக இருக்கிற பிரபஞ்சக் கொள்கை களை மகாத்மா காந்தி தனது வாழ்க்கையில் கடைபிடித்தார். இந்தக் கொள்கைகள் புவிஈர்ப்பு விதியை போல என்றும் மாறாதவை."

டாக்டர் கிங்குக்கு காந்திஜி உத்வேகமாக அமைந்தது போலவே காந்திஜியின் வலுவான நம்பிக்கைகளுக்கு வடிவம் கொடுப்பதில் அமெரிக்க தத்துவியலாளர் ஹென்றி டேவிட் தோரு உதவியுள்ளார். அமெரிக்காவில் நிலவிய அடிமைத்தனத்துக்கு எதிராக அமைதி வழி போராட்டம் நடத்தியதற்காக தோருக்கு ஒருமுறை சிறை தண்டனை விதிக்கப்பட்டது. எளிமையான வாழ்க்கை தொடர்பான தோருவின் பார்வைகளை காந்திஜி கட்டாயம் பாராட்டியிருப்பார். முக்கியமாக 1949ம் ஆண்டு தோரு எழுதிய 'ஆன் தி டியூட்டி ஆ∴ப் சிவில் டிஸ்ஓடியன்ஸ் என்ற கட்டுரையை படித்து உத்வேகம் அடைந்த பிறகு தான் காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கினார். தோருவின் கட்டுரை வெளியான பிறகே 1930-32ஆம் ஆண்டில் தனது இயக்கத்துக்கு காந்திஜி அந்தப் பெயரை இட்டார்.



தோருவே உபநிடதங்களில் இருந்து உத்வேகம் பெற்றவர்தான். ஹார்வர்ட் கல்லூரியில் படித்த போது 1800 களில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட உபநிடத புத்தகங்களை அவர் படித்திருந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்திஜிக்கு வெற்றி தேடித்தந்த புறக்கணிப்புக்கள், பேரணிகள் போன்ற அதே யுக்திகளை டாக்டர் கிங்கும் பயன்படுத்தினார். அவ்வளவு காலம் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்த நிலையில் செல்மா பேரணிதான் கறுப்பர்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுத் தந்தது. நாற்பததி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவின் முதல் ஆபிரிக்கர் அமெரிக்கர் அதிபர் ஆவதற்கு பராக் ஒபாமாவுக்கு இந்த உரிமைதான் அடித்தளமாக அமைந்தது. தனது அதிபர் பதவி டாக்டர் கிங், காந்திஜியின் கற்பித்தல்களுக்கு இடையே உள்ள தொடர்பை உணர்த்த பராக் ஒபாமா, "காந்திஜியிடம் இருந்து நான் அதிக உத்வேகம் பெறுகிறேன். தனது அகிம்மை கொள்கை மூலம் டாக்டர் கிங்குக்கு அவர் உத்வேகம் அளித்தார். நெறிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அவர் பல விஷயங்களை செய்துள்ளார். உலகையே மாற்றியுள்ளார்" என்று கூறியுள்ளார்.

அமெரிக்க - இந்திய கூட்டுறவு நாம் பகிர்ந்து கொண்டிருக்கும் மதிப்பீடுகளால் உந்தப்படுகிறது. இந்த மதிப்பீடுகளில் பெரும்பாலானவை காந்திஜியின் கற்பித்தல்கள். நம்பிக்கைகளால் தாக்கம் பெற்றவை. எடுத்துக்காட்டாக, சமத்துவம், அனைத்து மதங்களையும் ஏற்றுக்கொள்ளுதல், சகிப்புத்தன்மை, மதங்களிடையே ஒற்றுமை என்பன பற்றிய காந்திஜியின் சிந்தனைகளும் மதிப்பீடுகளும் இந்திய சமூகம், கலாச்சாரத்தின் இழையாக இன்று உள்ளன. வலுவான இந்த ஒத்த மதிப்பீடுகள்தான். இரு நாட்டு மக்களிடையே நிலவும் உறவையும் இரு நாட்டு அரசுகள் இடையிலான ராஜதந்திர உறவையும் நெருக்கமடையச் செய்கின்றன.

மத, சகிப்புத்தன்மை, மதங்களுக்கிடையிலான ஒற்றுமையில் காந்திஜி கொண்டிருந்த நம்பிக்கையின் பின்விளைவாகவே இந்திய ஜனநாயகம் வலுவாக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க உள்ளூர், மாநில, தேசிய தேர்தல்களில் வாக்களிக்க இந்தியர்கள் செல்கின்றர். காந்திஜியிடம் இருந்து பெற்ற உத்வேகம் காரணமாகவே இந்திய சமூகம் இந்த ஜனநாயக கொள்கைகளுக்கு ஆதரவளித்து ஏற்றுக்கொள்கிறது. யார் வெற்றி பெறுகிறார்கள் அல்லது தோற்கிறார்கள் என்பது பற்றி கவலைப்படாமல் காலங்களைக் கடந்து தேர்தலுக்கு மதிப்பளிக்கப்படுகிறது.


தேர்தலின் போது வாக்காளரின் விருப்பங்களை ஏற்றுக்கொள்வதுதான் நன்கு இயங்கிக் கொண்டிருக்கும் ஜனநாயகத்துக்கு அடையாளம். ஜனநாயகத்தை நம்புவது, மதிப்பளிப்பது என்பது காந்திஜி நமக்கு அளித்த மிகப்பெரிய பரிசு. இந்தியாவுக்கு மிகப் பெரிய வம்சாவளி சொத்து. இந்திய சமூகம் அனைத்து மதங்களையும் மதிப்பதில் காந்திஜி ஏற்படுத்தியுள்ள தாக்கம் இல்லையென்றால், இந்திய ஜனநாயகம் இன்று இருப்பது போல் உயிர்த்துடிப்புடன் இருந்திருக்காது.

இந்தியா- அமெரிக்கா இடையிலான ஒத்த மதிப்பீடுகள் பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். மனித உரிமைகள் மத சுதந்திரம், சுதந்திர சமூகம், கல்வி, சட்டத்தின் ஆட்சி போன்றவை இந்த மதிப்பீடுகளில் சில. ஆனால் இந்தியா- அமெரிக்கா இடையே 21ம் நூற்றாண்டை வரையறை செய்யும் முக்கியமான ஒத்த மதிப்பீடு என்னவென்றால் ஜனநாயகத்தின் மீது நாம் கொண்டுள்ள அடிப்படை நம்பிக்கைதான். இதற்கு காந்திஜிக்கு மனப்பூர்வமான நன்றியை நாம் தெரிவித்தாக வேண்டும்.

காந்திஜி நமக்களித்த சொத்தான அவரது கற்பித்தல்கள் காலங்களை கடந்தவை, நிலைத்து நிற்பவை. காந்திஜியின் மரம் பெரிதாக வளர்ந்து, புதிய விதைகளை பரப்பிக் கொண்டிருக்கிறது. நோபல் பரிசு பெற்றவர்களான டாக்டர் கிங், ஆர்ச்பிஷப் டெஸ்மாண்ட் டூடு, தலாய்லாமா, ஆங்சான் சூகி, அதிபர் ஒபாமா. புதிய மரக்கன்றுகள் கட்டாயம் வளரும். எதிர்காலத்தில் நோபல் பரிசு வெல்பவர்கள் தங்கள் ஏற்புரைகளில் காந்திஜிக்கு நன்றி தெரிவிப்பார்கள். ஒடுக்குமுறையும் புறக்கணிப்பும் உலகில் இருக்கும் வரை, இது போன்றவற்றிற்கு எதிராக போராட்டம் நடத்துவதற்கு ஆதரவாக ஒத்துழையாமை இயக்கத்தை மக்கள் பயன்படுத்துவார்கள். இந்தப் புதிய மரங்கள் எங்கெல்லாம் முளைக்கின்றனவோ, அங்கு இந்தியா- அமெரிக்காவைப் போலவே அனைவருக்குமான நீதியும், ஜனநாயகமும் தழைக்கும். "ஜனநாயகத்தின் உண்மையான தார்ப்பரியத்தை வளர்த்தெடுக்க வேண்டுமானால், நாம் சகிப்புத்தன்மை இல்லாதவர்களாக இருக்க முடியாது" என்று காந்திஜி ஒரு முறை கூறியது நினைவு கூரத்தக்கது. ●

# சிங்கள – தமிழ் உரிமைச் சிக்கலென்பது சின்னத்தனம்

## நூலக ஒழுங்கு விதிகள் மீறப்பட்ட ஒரு நிகழ்வை சிங்கள் தமிழ் உரிமை சிக்கலாக சித்தரிப்பது சின்னத்தனம் என யாழ் ஆய்வறிவாளர் அணியம் அறிக்கை



தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த சுற்றுலா பயணிகள் பலர் யாழ் பொது நூலகத்திற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து நிகழ்ந்த ஒரு நூலக ஒழுங்கு விதி மீறல் பிரச்சினை, யாழ் பிரதேச பத்திரிகைகளாலும், இவைகளது ஊடக அனுசரணையுடன் - தமிழ் இனவாத அரசியல்வாதிகளாலும், இணையங்களாலும், ஒரு சிங்கள - தமிழ் இன உறவுச் சிக்கலாக சித்தரிக்கப்பட்டு இன விரிசல் ஏற்படுத்தப்பட்டு வரும் செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்க விரும்புகின்றோம்.

சிங்கள சகோதர மக்களின் யாழ் வருகைகளுக்கு எதிராக கடந்த ஒரு வருட காலமாக செய்யப்பட்டுவரும் இன விரிசலை ஏற்படுத்தும் பிரச்சாரங்களின் இன்னொரு அங்கமாகவே இச் சம்பவமும் சித்தரிக்கப்பட்டு வருவதை சுய சிந்தனையுள்ள எவரும் இலகுவில் இனங்கண்டு கொள்வர்.

யாழ் பொது நூலகத்தினரின் நிர்வாகத் தவறுகள் நிமித்தமும், சுற்றுலாப் பயணிகளின் வருகையால் நூலக ஊழியர்கள் மேல் அதிகரித்த வேலைப்பழுவின் விளைவாகவும், நூலக ஊழியர்களுக்கும் உல்லாசப் பயணிகளுக்கும் இடையில் இருந்த மொழிப் பிரச்சினை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வின்மைபாற்பட்டும் எழுந்த இந்தப் பிணக்கு நூலக ஒழுங்கு விதிகள் சம்பந்தமானதொன்று என்பதே சரியான பார்வையாகும். இந்நிலையில், இச் சம்பவமன்றி, இதனை ஒரு சிங்கள-தமிழ் இன உறவுச் சிக்கலாக சித்தரித்து, 1981 யாழ் நூலக எரிப்புச் சம்பவத்துடன் இணைத்து எழுதி - அறிக்கைகள் விட்டு, தமிழ் இனவெறியை ஏற்படுத்தி அரசியல் ஆதாயம் பெற முயல்வதே மிக இழிவான இன வெறிச் செயல் என நாம் சுட்டிக்காட்ட விரும்பு கின்றோம்.

இச் சம்பவம்பற்றி விரிவாக விசாரித்து உறுதியாகத் தெரியவரும் விடயங்களின்படி, மேற்படி சம்பவம் நடைபெற்ற தினத்திற்கு முந்தைய தினம் தென்னிலங்கை உல்லாச பயணிகள் பலர் பொது நூலகத்தை பார்வையிட வந்திருந்ததாகவும், துரதிருஸ்டவசமாக அன்று போயா விடுமுறை தினமாகையால் அவர்களால் நூலகத்தை பார்வையிட முடியாதிருந்ததாகவும், இந்நிலையில், நூலக வாசலில் கடமையிலிருந்த காவலாளி அவர்களை மறுநாள் மாலை வருமாறு அறிவுறுத்தியிருந்ததாகவும், இதன்படி அவர்கள் சம்பவம் நடந்த தினமான மறுநாள் மாலை நூலகத்தை பார்வையிட வந்தபோது நூலகத்தின் உள்ளே இலங்கை மருத்துவர் சங்க மாநாடு நடப்பதை காரணம்காட்டி அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்ததாகவும், அதன் பின்னர் நூலக காவலாளியின் வேண்டுகோளின் பேரிலேயே தாம் வந்திருந்தபடியினால் தம்மை உள்ளேவிட அனுமதிக்க வேண்டுமெனக்கோரி சுற்றுலாப் பயணிகள் சிலர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும், அதில் ஒருவர் தான் ஜனாதிபதி அலுவலகத்தில் தொழில் புரிபவராகையால் தம்மை உள்ளே நுழைய அனுமதிக்கவேண்டுமென வற்புறுத்தியதாகவும், இவருடன் இன்னும் பலரும் இணைந்து தம்மையும் உள்ளே நுழையவிடுமாறு தொடர்ந்து வற்புறுத்தியதாகவும், இதனால் மேலதிக படையினர் வரவழைக்கப்பட்டதாகவும், இதன் பின்னர் யாழ் மாநகர முதல்வரின் உத்தரவின் பேரிலேயே உல்லாசப் பயணிகள் அனைவரும் நூலகத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து நூலகத்தினுள் நுழைந்த இவ் உல்லாசப் பயணிகளில் ஒரு சிலர் மட்டும் அசாதாரணமாக நடந்துகொண்டதாகவும் அறியப்படுகிறது. இவை தவிர, தென்னிலங்கை சுற்றுலாப்பயணிகள் அனைவரும் அடாவடியில் ஈடுபட்டதாகவும், முறைகேடாக நடந்ததாகவும், அனுமதியின்றி நுழைந்ததாகவும், நூலகத்தை முற்றுகையிட்டதாகவும் வெளிவந்த செய்திகளும், கண்டனக் குரல்களும், கடிதங்களும், அறிக்கைகளும், இனவெறியூட்டி அரசியல் ஆதாயம்பெற எழுதப்பட்ட வெறும் அவதூறுகளாகவே நாம் அறிந்து கொள்கிறோம்.

உண்மை நிலைமைகள் இப்படியிருக்க, தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் பலர் கடந்த ஒரு வருடத்திற்கும் அதிகமாக எவ்வித பாரிய பிரச்சினையுமின்றி பொது நூலகத்தை பார்வையிட்டுத் திரும்பிவருகின்றதொரு பின்னணியில், சம்பவத்திற்கு முந்தைய தினம் நூலகத்தை பார்வையிட வந்த உல்லாசப் பயணிகள் நூலக காவலாளியின் கட்டளையை ஏற்று அமைதியாகத் திரும்பிச் சென்றதை கவனத்தில் கொள்ளத் தவறி, வெகு தொலைவிலிருந்து வந்து தரம் குறைந்த தங்குமிட சூழ்நிலையில், தெருவிலும் - திண்ணையிலும் - யாழ் திறந்தவெளியிலும், தங்கி திரும்பும் உல்லாசப்பயணிகளை சம்பவம் நடைபெற்ற அன்று நூலகத்தை பார்வையிட வருமாறு அழைத்து பின்னர் அவர்கள் நுழைய அனுமதி மறுத்தது நூலக நிர்வாகத்தின் பெரும் தவறு என்பதையும் எண்ணிப்பார்க்க மறந்து, தற்செயலான இந்தச் சம்பவத்தை புனைந்து பூதாகரமாக்கி முழுச் சிங்கள மக்களுக்கு எதிராகவும் சேறு பூசி, தமிழ் உணர்வாளர்களை உருவேற்றி அரசியல் ஆதாயம்பெறும் அற்பத்தனமான ஆசையில் '81 நூலக எரிப்புச் சம்பவத்துடன் இதனை இணைத்து செய்திகளும், அறிக்கைகளும், கடிதங்களுமாக 'நேர்முக வர்ணணைகள்' செய்துவரும் யாழ் ஊடகங்களையும், இணையங்களின் ஒன்றியங்களையும், அரசியல் பிரகிருதிகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்க விரும்புகின்றோம்.

அத்துடன் தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த சுற்றுலாப் பயணிகளுக்கு உள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டு அவர்கள் வாசலில் தரித்து நின்ற வேளையில், நூலகத்தைப் பயன்படுத்த வந்திருந்த சில தமிழ் மக்களும், மருத்துவர்சங்க மாநாட்டிற்கு வந்திருந்த தமிழ் மருத்துவ மாணவர்களும் நூலகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட்ட விடயம் இந்தச் சுற்றுலாப் பயணிகளுக்கு தவறான சமிக்ஞைகளை தந்திருக்கும் சாத்தியமுண்டு என்பதையும் இந்தப் பத்திரிகைகளும், கண்டன அறிக்கைகள்விடும் கனவான்களும் கவனத்தில் கொள்ள தவறியுள்ளனர் என்பதை இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். மேலும், முதல் நாள் நூலக காவலாளியின் முடிவை ஏற்று நூலகத்தை பார்வையிடும் ஒரே காரணத்திற்காக மட்டும் மறுநாள்வரை தமது பயண ஏற்பாடுகளை சுற்றுலாப் பயணிகள் எவரும் பின்போட்டிருப்பின், மறுநாளும் அவர்கள் நூலகத்தை பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டது எவ்வாறு அவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்து ஆத்திரத்தை ஊட்டியிருக்கும் என்பதையும் இவைகளும் இவர்களும் எண்ணிப்பார்த்திருக்காதது கவலைக்குரியது. இது தவிர, நூலகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட்ட ஒரு சிலர் மட்டும் அசாதாரண நடத்தையில் ஈடுபட்டிருந்த நிலையிலும், அதுவும் நூலகத்திற்கு எதுவித சேதத்தையும் இவர்கள் எவரும் ஏற்படுத்தியிருக்காதபோதும், உல்லாசப் பயணிகள் அனைவரும் அடாவடித்தனங்களில் ஈடுபட்டதாக செய்திகளை பத்திரிகைகள் திட்டமிட்டு திரித்து வெளியிட்டு வரும் தர்மத்தையும் நாம் இங்கு கேள்விக்குட்படுத்த விரும்புகின்றோம்.

இலங்கையிலுள்ள இனங்களுக்கு இடையிலான அரசியல் உரிமைப் பிரச்சினைகள் ஆக்கபூர்வமாகத் தீர்க்கப்பட சகல இனங்களுக்கு இடையிலான உறவும் மிக ஆரோக்கியமாக பேணப்பட வேண்டியது அத்தியாவசியமானதொரு தேவையாகவுள்ள நிலையில், அரசியல் ஆதாயங்களுக்காக இன வெறியை எண்ணை ஊற்றி எரிய வைக்கும் வேலை முறைகளை தவிர்க்க வேண்டுமென நாம் சகல தரப்பினரையும் வற்புறுத்துகின்றோம்.

அத்துடன், சுற்றுலாப் பயணிகள் அனைவரும் பொது நூலகத்தை வந்து பார்வையிட இயலுமான சகல ஏற்பாடுகளையும் நூலக நிர்வாகம் உடன் செய்யவேண்டுமென நாம் வேண்டுகிறோம்.

மேலும், நூலகத்தை பார்வையிடவரும் சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பினால் நூலக ஊழியர்களின் மேல் வரும் வேலைப்பளுவை ஈடு செய்யும் நடவடிக்கைகளையும் நூலக நிர்வாகம் உடன் எடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

30 ஒக்டோபர் 2010

# நவம்பர் 19 தோழர் பத்மநாபா பிறந்த தினம் ...

1ம் பக்கத் தொடர்ச்சி

அரசியல் வாழ்வை தொடர்ந்த தோழர்
பத்மநாபா 1981ஆம் ஆண்டு நடைபெற்ற
கட்சியின் அமைப்பாளர்கள் மாநாட்டில்
ஈபிஆர்எல்எவ் இன் தலைமை பொறுப்பை
ஏற்றார். 1984ம் ஆண்டு ஈபிஆர்எல்எவ்
இன் முதலாவது காங்கிரசில் செயலாளர்
நாயகமாக தெரிவுசெய்யப்பட்ட அவர்
இறக்கும் வரை கட்சியின் செயலாளர் நாய
கமாக பணியாற்றினார்.

காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரி,
தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, யாழ்ப்பா
ணம் மத்தியகல்லூரி ஆகிய கல்லூரிகளில்
அவரது பாடசாலைக் கல்வியை கற்றார்.
1972 ஆம் ஆண்டு அவரது பாடசாலைக்
கற்றல் முடிவுக்கு வந்தது. அரசியல் நடவ
டிக்கைகள் காரணமாக பொலிஸாரால்
கைது செய்யப்பட்டு சில நாட்களின் பின்
விடுதலை செய்யப்பட பத்மநாபாவை அவ
ரது பெற்றோர் கணக்கியல் துறையில்
கல்வி பயில்வதற்காக 1976 ஆம் ஆண்டு
இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தனர்.
ஆனால், அவர் பாலஸ்தீன விடுதலை
இயக்கம் ஒன்றிடம் ஆயுதப் பயிற்சியைப்
பெற்றுக்கொண்டு ஒரு போராளியாக அங்கி
ருந்து நாடு திரும்பினார்.

தமிழர்களின் ஆயுதந் தாங்கிய போராட்டம்
எங்கள் மத்தியில் ஜனநாயக விழுமியங்
களை புறந்தள்ளி உதாசீனப்படுத்தும்
போக்கு தலையெடுத்திருந்த போதும்
தோழர் பத்மநாபா எப்போதும் ஜனநாயக
பாரம்பரியங்களுக்கு மதிப்பளித்து வந்தவர்.
கட்சிக்குள் ஜனநாயகத்தையும், தமிழ்
இயக்கங்களிடையே ஐக்கியத்தையும்
இடையறாது வலியுறுத்தி வந்தவர். கட்சிக்
குள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு
அவர் துப்பாக்கிகளுக்குப் பதிலாக விமர்
சனம் சுயவிமர்சனம் என்ற ஆயுதத்தையே
நம்பினார். இயக்கங்களிடையே தோன்றிய
பிணக்குகளை பேச்சுவார்த்தைகள் மூலம்
தீர்த்துக்கொள்ளவதற்கே முக்கியத்துவ
மளித்தார். அவர் இறக்கும் வரையும், இற
ந்த பின்னரும் பல்வேறு அரசியல் கட்சிக
ளின் தலைவர்களாலும் மரியாதை
செலுத்தப்படும் ஒருவராக தோழர் பத்மநாபா
விளங்குவதற்கு அவரது இந்த அணுகு
முறையும் ஒரு காரணம்.

தோழர் பத்மநாபாவின் மறைவின் பின்
வெளியிடப்பட்ட நினைவு மலரில் அவரது
நீண்டகால நண்பனும், கட்சித் தோழனு
மான தோழர் வரதராஜப்பெருமாள் குறிப்
பிட்டிருப்பவற்றை இங்கு குறிப்பிடுதல்
பொருத்தமாகும்.

''*அவர் கொள்கைப் பிடிவாதமுடைய ஒரு
சமதர்மப் புரட்சிவாதி. மாக்சிசம், வர்க்கம்,
புரட்சி, போராட்டம் என்ற வார்த்தைப்
பிரயோகங்களை உருப்போடும் வரட்டுத்
தனமோ அல்லது தனது சுயநல நோக்கங்
களுக்காக புரட்சிக் கோட்பாட்டை பயன்
படுத்தும் பாசாங்குத் தனமோ அவரது
புரட்சிவாழ்க்கையில் எள்ளளவும் இருந்த
தில்லை.*

*அவர் சமூகப் புரட்சிக்காக உணர்வு பூர்வ
மாக உழைத்தார் சமூகப் புரட்சியாளர்
களை உள்ளத்தால் நேசித்தார். நேர்மை
யான சமூகப் புரட்சியாளர்கள் மீது – அவர்
கள் தன்னை விமர்சிப்பவர்களாயினும் சரி,
எதிர்ப்பவர்களாயினும் சரி – உளமார
அன்பு செலுத்தினார். அவ்வாறானவர்க
ளோடு பழகுவதிலும், நட்பு கொள்வதிலும்
பெருமிதமும் மகிழ்ச்சியும் கொண்டார்.*

*தோழர் நாபாவிடம் கர்வம், தலைக்கனம்,
அதிகார வெறி என்பவற்றை இம்மியளவே
னும் யாரும் கண்டிருக்க முடியாது. பல்லா
யிரக்கணக்கான இளம் தோழர்கள் அவர்
சுட்டு விரலுக்கு கட்டுப்பட்டு எதையும் செய்
யத் தயாரான நிலையில் இருந்த போதிலும்
அவர் எந்தக் கட்டத்திலும் அதிகார
மமதையோடு நடந்ததில்லை. ஸ்தாபனத்
தின் ஜனநாயக பூர்வமான பொது முடிவு
களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஒரு கட்டுப்
பாடுடைய உறுப்பினனுக்கு முன்னுதார
ணமாக அவரே திகழ்ந்தார்.*''

இவ்வாறு தோழர் வரதராஜப்பெருமாள்,
தோழர் பத்மநாபாவின் குணநலன்களை
மிகவும் நேர்த்தியாய் பிரதிபலித்திருந்தார்.

தோழர் பத்மநாபா எப்போதும் மனித
நேயத்துக்கு முக்கியத்துவம் வழங்கியவர்.
உழைக்கும் மக்களின் துன்ப, துயரங்களு
க்கு தீர்வு காண உழைப்பதை தனது
இலட்சியமாகக் கொண்டிருந்தார். அவரது
தாராள மனப்பான்மையும், தயாள குணமும்
தான் அவரது எதிரிகளுக்கும் வாய்ப்பாய்
அமைந்தது.

''மக்களுக்காகவே மண்ணை நேசிக்கின்
றோம்'' என்ற அவரது புகழ்பெற்ற வாக்கி
யம் அவர் எந்தளவிற்கு மக்களை நேசித்
தார் என்பதை எடுத்துக்காட்டுவதாகும்.

சிங்கள மக்களின் ஆதரவு எமக்கு அவசி
யம் என்பது பற்றி பலர் இன்று பேசுகின்
றார்கள் ஆனால், எமது போராட்டத்தின்
ஆரம்ப காலத்திலேயே சிங்கள மக்கள்
எமது நண்பர்கள் என்பதை நன்குணர்ந்து
செயற்பட்டவர் தோழர் பத்மநாபா.
அவர், தனது சொல்லாலும், செயலாலும்
மட்டுமல்ல தனது வாழ்க்கை நடைமுறை
மூலமும் எங்களுக்கு வழிகாட்டிய, கற்றுத்
தந்த ஒருவர்.

ஏறத்தாள 10 ஆண்டுகளாக பழகி வந்த
ஆனந்தி என்ற இந்தியப் பெண்ணை
10.04.1989 இல் திருமணம் செய்து
கொண்டார். திருமணமாகி சுமார் ஒரு வரு
டத்தில் 19.06.1990 இல் சென்னை,
கோடம்பாக்கத்தில் வைத்து படுகொலை
செய்யப்பட்டார். இதனால் அவருக்கு குடு
ம்ப வாரிசு இல்லை. ஆனால், அமரர்
தோழர் பத்மநாபாவின் அரசியல் வாரிசுகள்
பல ஆயிரக்கணக்கானவர்கள், இலங்கை
யில் மட்டுமல்ல இன்று உலகெங்கும் உள்
ளார்கள். அவர்கள், தோழர் பத்மநாபாவின்
கொள்கைகளையும், இலட்சியங்களையும்
முன்கொண்டு செல்வார்கள். தங்கள்
சொல்லாலும், செயலாலும் அவரது நாமம்
நின்று, நிலைக்கச் செய்வார்கள். மக்களை
நேசித்து, மக்களின் உரிமைகளுக்காக
போராடி, மக்களின் ஜனநாயக உரிமை
களை நிலைநாட்டுவதற்காகவே தனது
உயிரையும் அர்ப்பணித்த தோழர் பத்ம
நாபா என்னென்றும் மக்களால் நேசிக்கப்
படுவார்.

**சிவராஜா மோகன்**

# பாரிஸ் மாநாடு திருப்புமுனையாக அமையட்டும்

## பிராந்திய மாநாட்டிற்கு பொதுச்செயலாளர் தி. ஸ்ரீதரன் வாழ்த்து

1ம் பக்கத் தொடர்ச்சி

மக்களும், இழப்புக்கள் போக எஞ்சி இரு
க்கிறோம்

இக்கட்டத்தில் முக்கியமான தவிர்க்க முடி
யாத கேள்வி ஒன்று எழுகின்றது

நாம் எமது சமூக இலக்குகளை அடைந்
திருக்கின்றோமா?

எமது சமூக வாழ்வு சமூகத்தில் ஜன
நாயக மயப்பட்டிருக்கின்றதா?

சமூக ஏணிப்படிகளில் அடித்தட்டில்
வாழும் மக்களின் சமூக வாழ்வில் மேம்
பாடு ஏற்பட்டிருக்கிறதா?

சமூக தளைகள் அறுந்திருக்கிறதா? சிறி
தளவேனும் மாற்றம் நிகழ்ந்திருக்கிறதா?

இங்கு யதார்த்தமாகவும் உண்மையாகவும்
அப்படி எதுவும் நிகழ்ந்து விடவில்லை
என்றே பதிலளிக்க வேண்டியிருக்கிறது.
ஆனால், எமது போராட்டத்தின் ஆரம்ப
நிலையிலேயே பாசிசத்தின் நிழல் கவிந்து
அது எமது சமூகத்தினுள் ஊடறுத்து
போராட்டத்தின் சகல தார்மீக நெறி முறை
களையும் அழித்தொழித்து ஆயிரக்கணக்
கான சுதந்திரப் போராட்டக் காரர்களையும்
தலைவர்களையும் கல்வியாளர்களையும்
துவம்சம் செய்ததோடு எமது இரண்டு
தலைமுறையினரில் கணிசமானோரை
இராணுவ மயப்படுத்தியும், இராணுவ
மனோபாவத்திற்கு உள்ளாக்கியும் சமூகக்
கருவூலங்களான கலாச்சார பொருளாதார
விழுமியங்கள் எல்லாவற்றையும் நிர்மூலம்
செய்தது. சிந்திப்பதை நிறுத்திவிடுமாறு
சமூகத்தை நிர்ப்பந்தித்தது. தனக்கு அடி
பணிந்து நிற்குமாறு தொழுதேற்றுமாறு
அது அச்சுறுத்தியது தமக்கு எதிரானவர்
கள் அல்லது அவ்வாறென தாம் சந்தேகப்
படுபவர்கள் எல்லோரையும் மரணப்பொறி
க்குள் வீழ்த்தியது. திட்டவட்டமாக 1980
களின் நடுப்பகுதியில் குரூர முகம் காட்
டிய பாசிசம் 2009 நடுப்பகுதியில் பலத்த
ஆரவாரத்துடன் வீழ்ச்சியுற்றது.

அதற்குப் பிந்திய சூழலில் நாம் பேசுவதற்
கும் கலந்துரையாடுவதற்குமான சூழல்
உருவாகியிருக்கின்றது என்பது உண்
மையே அது தாயகத்திலும் புலம்பெயர்
தளத்திலும் உண்மையே. ஆனால் தமிழ்
மக்களுக்கும் எண்ணிக்கையில் சிறுபான்
மையினரான தேசிய இனங்களுக்கும்
உரிமைகளை அங்கீகரிப்பதில் கடுமை
யான நிலை உருவாகியுள்ளது. 1980
களில் இருந்ததை விட நிலைமை கடுமை
யாகியுள்ளது. இத்தகைய சிக்கலான இக்
கட்டான நிலைக்கு தமிழ் மக்களை இட்டு
வந்தது எம்மத்தியில் இருந்த பாசிசமே
என்பதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழர்களுக்கு எதையும் வழங்கத் தேவை
யில்லை பயங்கரவாதம் முடிவுக்கு வந்து
விட்டது என்றவாறு இலங்கையின் இர
ண்டு பிரதான சிங்களக் கட்சிகளை சேர்ந்
தவர்களும் சொல்ல முற்படுகின்றார்கள்.
தமிழர்களின் பிரச்சினை பயங்கரவாததத்
திற்கு முற்பட்டது 60 ஆண்டுகளுக்கு
மேலாக நிலவுவது என்பதை உணர்ந்தும்
உணராதவர்கள் போல் இவர்கள் நடக்க
முற்படுகின்றார்கள். சிங்கள மக்கள் மத்தி
யில் 2009 வெற்றியின் பெருமித உணர்வு
கள் பரவலாக இருந்தாலும் அவர்கள் இன்று
தாம் அனுபவிக்கும் ஜனநாயக உரிமை
களும் காவுகொள்ளப்பட்டு விடுமோ என
அச்சமுறுகின்றார்கள் இலங்கையில் இன
சமூகங்களின் பிரச்சினைக்கு ஜனநாயக
ரீதியாக தீர்வு காணாத வரை இலங்கை
யின் பெரும்பான்மை இன மக்களும் ஜன
நாயக உரிமைகளை அனுபவிக்க முடியா
தென்பதே நிஜம்.

தென்னிலங்கையில் முற்போக்கு அரசி
யலும் பலவீனமடைந்த நிலையிலேயே
காணப்படுகின்றது. கெடுபிடி யுத்தத்திற்கு
பின்னரான உலகம் 1990 இலிருந்து தீவிர
மாற்றமடைந்து வந்திருக்கிறது. அது தென்
னாசியாவையும் பாதித்தது. இந்தியா, இந்
திய - இலங்கை ஒப்பந்தத்தின் சாரம்ச
த்தை அதன் அதிகாரப் பரவலாக்கத் திட்
டத்தை நடைமுறையில் முழுமையாக
சாத்தியமாக்குமாறு இலங்கையிடம் பல
தடைவை நயந்து கேட்டிருக்கிறது. இலங்
கையின் பல்லினத்தன்மையை உறுதிப்
படுத்துமாறு கேட்டிருக்கிறது. நட்பான அய
ல்நாடு என்ற வகையில் பல்வேறு தடவை
கள் இலங்கையின் தலைவர்களிடம் பல
முறை இதனை வலியுறுத்தி வந்திருக்கிறது.

ஆனால், இந்த விடயம் எதிர்நிலையிலேயே
பயணப்பட்டிருக்கிறது. அவசர காலச் சட்ட
த்தின் கீழ் இணைக்கப்பட்ட வடக்கு கிழ
க்கு மாகாணங்கள் நீதிமன்றத் தீர்ப்பின்
அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கிறது.
முறையாக இணைப்பதற்கு மனசாரச் செய
ற்படுவதற்கு இரண்டு பிரதான சிங்களக்
கட்சிகளுக்கும் மனமொருப்படவில்லை.
இந்தியாவின் அனுசரணையுடனான அதி
காரப்பரவலாக்கத் திட்டம், சந்திரிகாவின்
சமஸ்டி, ஒஸ்லோவின் கூட்டாச்சி மகிந்த
வின் அனைத்துக்கட்சிக் கூட்டம் எல்
லாமே கடந்து போய் விட்டன தற்போதும்
வடக்கு கிழக்கின் இரண்டு மாகாணங்களு
க்கும் பொருள் பொதிந்த அதிகாரப் பகிர்
விற்காக உணர்ச்சி வேசப்படாமல் நிதான
மாக செயற்பட வேண்டியிருக்கிறது.

யுத்தத்தின் இறுதியில் பணயம் வைக்கப்
பட்டு பின்னர் பிரளயமாக இடம்பெயர்ந்த
மக்களின் மீள் குடியேற்றம் முட்கம்பிக
ளைத் தாண்டி வன்னியில் நிகழ்கிறது.
ஆனால், அவர்களின் வாழ்க்கையினை
உறுதியான அடித்தளத்தில் நிர்மாணிப்பத
ற்கு உள்ளகக்கட்டமைப்பு வசதிகள் ஏற்ப
டுத்தப்பட வேண்டும்.

உயிரிழப்பு, ஊனமுற்ற நிலை பொருளா
தார இழப்பு பேதலித்த மனமென வன்னி
யில் மக்களின் இழப்புக்கள் பிரமாண்டமா
னவை. இவர்களின் தேவைகளை நிவர்த்
திக்க ஊழலற்ற மனிதப்பண்புடனான அர்
ப்பணிப்புத் தேவை இந்தியா மற்றும் ஐ.நா
ஸ்தாபனங்கள் உலக நாடுகள் கணிசமான
அளவில் உதவிகளை வழங்கிவருகின்றன.

அகதிகளான மக்களின் வாழ்வை மேம்படு
த்தவும் வடக்கு கிழக்கை மீள் கட்டியெழு
ப்பவும் சர்வதேச சமூகம் உதவி வழங்க
முன்வந்திருக்கிறது. இவற்றை வினைத்
திறனுடன் கையாள்வதற்கான தமிழர் பங்
குபற்றலுடனான அரசமுறைமையொன்று
இன்னும் இங்கு ஸ்தாபிக்கப்படவில்லை

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக நில
வும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பத
ற்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் எல்லாவற்
றையுமே நாங்கள் நழுவவிட்டுள்ளோம்.
தமிழர்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்தும்
தீர்க்க தரிசனமற்ற அரசியலே இதற்கு
காரணம் என்றால் மிகையல்ல.

ஆனால், இந்த திரும்பத்திரும்ப நிகழ்த்தப்
பட்டு வருகின்ற வரலாற்றுப்பிழைக்கு
முடிவு கட்டவேண்டும் அப்போதுதான் பன்
முகத்தன்மை வாய்ந்ததும் சமத்துவமான
தும், ஐக்கியமானதுமான வாழ்வொன்றை
இங்கு கட்டியெழுப்ப முடியும் எமது மக்கள்
இழந்த இழப்புக்களுக்கும் சந்தித்த பேரழி
வுகளுக்கும் ஈடாக தீர்வொன்று எட்டப்பட
வேண்டும். எத்தனை அவமானங்கள் இழி
வுகள் உதாசீனம், மரணங்கள் மத்தியில்
நாம் வாழ்ந்திருக்கிறோம். இது இலங்கை
யில் வாழும் தோழர்களுக்கு மாத்திரமல்ல
புலம்பெயர்ந்து வாழும் தோழர்களுக்கும்
பொருந்தும்.

எமது மக்களின் சார்பில் எம்மை ஸ்தாபிப்
பதற்கு பாரதப்போரில் அபிமன்யு சிக்கியது
போல் ஒரு சக்கர வியூகத்தினுள் அல்
லவா நாம் சிக்கியிருந்தோம் இறுதியாக
அது எமது மக்களுக்கும் நேர்ந்தது. இவற்
றையெல்லாம் தாண்டி பேரழிவுகளுக்குப்
பின்னால் எஞ்சியிருப்பவை எமது கொள்
கைளும், கனவுகளும், இலட்சியங்களும்
தான். சமகாலச சூழ்நிலைக்கு ஏற்ப இவ
ற்றை வென்றெடுப்பதற்காக நாம் இயங்க
வேண்டியிருக்கிறது, செயற்பட வேண்டியி
ருக்கிறது, இன்று எமது ஸ்தாபனம் என்
பது உலகளாவியதாக அமைந்திருக்கி
றது. எமது பிரச்சினைகள் எம்மை அவ்
வாறு ஆக்கியிருக்கிறது தாயகத்திலுள்ள
தோழர்கள் மக்களை ஊக்கப்படுத்துவதில்,
தென்பூட்டுவதில் புலம்பெயர் தளத்திலுள்ள
தோழர்கள் நண்பர்கள் ஆதரவாளர்கள்
வழங்கிய பங் களிப்பை உரிமையுடனும்
நன்றியுடனும் நினைவுகூர கடமைப்பட்ட
வர்களாயுள்ளோம்.

புலம்பெயர் தளத்தில் இயங்கிய மாற்று
ஊடகங்கள் வழங்கிய பங்களிப்புகள்
வானொலி, இணையங்கள் இங்கு வழங்
கிய பங்களிப்பு சரித்திர முக்கியத்துவம்
வாய்ந்தவை. புலம்பெயர் தளத்தில் செயற்
பட்ட தோழர்களின் அர்ப்பணம், நேர்மை
தாயகத்திலுள்ளவர்கள் பற்றிய அவர்க
ளின் உள்ளுணர்வு என்பன எமக்கு பல
நண்பர்களை உருவாக்கித் தந்திருக்கிறது.

நாம் எமது மக்களின் அரசியல் உரிமை
களை வென்றெடுப்பதற்கும் இலங்கை
யினை அரசியல் அரங்கை ஜனநாயகப்
படுத்துவதற்கும் சமூக அபிவிருத்திப் பணி
களை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதற்
கும் எமது நியாயமான அரசியல் பிரதிநி
தித்துவத்தை வென்றெடுப்பதற்கும் பரந்த
அளவிலான ஐக்கியம் ஒன்றினை ஏற்படு
த்த வேண்டிய அவசியம் இருக்கிறது.

பாரிய அளவில் வெகுஜனங்கள் மத்தியில்
வேலை செய்ய வேண்டியிருக்கிறது. 1980
களின் முற்பகுதியில் அல்லது 70களில்
வேலை செய்தமை போன்ற முறைகளை
பின்பற்ற வேண்டியிருக்கிறது. ஆனால்
அப்போதிருந்த அரசியல் சமூக சவால்
கள் தற்போது உள்ளதுடன் ஒப்பிடுகை
யில் தலைகீழ் வித்தியாசமானவை ஓர
ளவு எளிமையானவை எனவே புதிய நில
வரங்களுக்கு ஏற்ப புதிய வெளிச்சத்தில்
நாங்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

சர்வதேச அளவில் எங்களைப் போன்று
மனித குலத்தில் நல்வாழ்விற்காக போரா
டும் சக்திகளுடன் கரங்கோர்த்து செயற்
படும் அந்த இயல்பை என்றைக்கும் நாம்
கைவிட்டுவிடக்கூடாது. சமூகத்தில் ஒடுக்
கப்பட்ட பிரிவினரின் அடையாளமே எமது
அடையாளம் நாம் அவர்களைப் பிரதிபலிப்
பவர்கள் மாத்திரமல்ல அந்த மக்களின்
விடிவிற்காக செயற்படுவர்கள் என்பதை
எப்போதும் மறந்துவிடக்கூடாது. பாரிஸ்
மாநாடு நடைபெறும் காலம் முக்கியத்து
வம் வாய்ந்தது. பாரிஸ் மாநாட்டின் வெற்றி
க்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# புனர்வாழ்வு அதிகார சபை தென்மராட்சியில் மக்களுடன் சந்திப்பு

## புனர்வாழ்வு அதிகார சபை பணிப்பாளர்களில் ஒருவரான தி.ஶ்ரீதரன் ஏற்பாடு







புனர்வாழ்வு அதிகாரசபையின் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் தென்மராட்சியில் பொதுமக்களை சந்தித்து தமது திட்டங்கள், நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்தனர்.

புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவர், அங்கத்தவர்கள் அதிகாரிள் தென்மராட்சி பிரதேசத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியிரை நேரில் சந்தித்து (22.10.2010) புனர்வாழ்வு அதிகார சபையின் திட்டங்கள் குறித்து விளக்கமளித்ததுடன், பொதுமக்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தனர். பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுசசெயலாளரும், புனர்வாழ்வு அதிகார சபையின் பணிப்பாளர்களில் ஒருவருமான தோழர் சிறிதரன் அவர்களின் ஏற்பாட்டில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் ஈ.ஏ.சமரசிங்க, பணிப்பாளர் டி.கே.ஜினதாச, பணிப்பாளர்கள் சபையின் செயலாளர் பதுருதீன் இலங்கை வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கி கருத்து தெரிவித்த தோழர் சிறிதரன் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அல்லற்படும் நீங்கள் உங்கள் பிரச்சினைகளை தெரிவித்து அதற்கு பரிகாரம் காண்பதற்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளோம். நீங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை இங்கு தயக்கமின்றி தெரிவியுங்கள் என்றார்.

கடந்த காலத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வீடுகளை கட்டுவதற்காகவும், சுயதொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்காகவும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையான கடனை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இந்த கடனுக்காக எந்தவொரு வங்கியும் வழங்காத மிகக் குறைந்த வட்டியாக 4 வீத வட்டியே செலுத்த வேண்டியிருக்கும் எனவும் இங்கு உரையாற்றிய புனர்வாழ்வ அதிகாரசபை பணிப்பாளர்களில் ஒருவரான டி.கே.ஜினதாச அவர்கள் விளக்கமளித்தார். கடனை பெற்றுக்கொண்ட ஒருவர் கடனை ஒருவருடத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை வட்டியை மட்டும் செலுத்தினால் போதும் எனவும் ஒருவருடத்தின் பின்னர் 10 வருட காலத்தில் இக்கடனை திருப்பிச் செலுத்தலாம். என்றும் குறிப்பிட்டார்.

நாங்கள் வெறுமனே உங்களுடன் உரையாடி விட்டுச் செல்வதற்காக இங்கு வரவில்லை. உங்களுடைய பிரச்சினைகளை தெரிந்து கொண்டிருக்கிறோம். உங்களுடைய இருப்பிடங்களை அமைப்பதற்கும், தொழில்வாய்ப்பு ஒன்றை ஏற்படுத்தி தருவதற்கும் நடவடிக்கை எடுப்போம். நீங்கள் நம்பிக்கையோடு கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்ட உங்கள் விண்ணப்பங்களை பிரதேச செயலாளர் உடாக எங்களுக்குக் கிடைக்கச் செய்யுங்கள். இதற்கான விண்ணப்பப்படிவங்கள் ஒரு மாதத்திற்கு முன்னரே சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டது. இவ்வாறு இங்கு வருகை தந்திருந்த பொதுமக்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் ஈ.ஏ.சமரசிங்கா தெரிவித்தார். இன்று காலையில் யாழ் மாவட்ட செயலகத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு காசோலைகளை வழங்கிவிட்டுத்தான் இங்கு வந்திருக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### அமைச்சர் டியூ குணசேகரா உரை

இங்கு வருகை தந்த கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சருமான டியூ குணசேகரா தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியே இந்த கடன் வழங்கும் திட்டமாகும். புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தங்கள் பிள்ளைகளை விடுவிக்க வேண்டும் என்பது பெற்றோர்கள் பலரின் ஏக்கமாக உள்ளது. சரணடைந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 50 வீதமானவர்களை விடுதலை செய்துவிட்டோம். கடந்த 4 மாதங்களிலேயே இவர்கள் விடுவிக்கப்பட்டுளனர் ஏனையோரும் விடுதலை செய்யப்படுவார்கள். நாளையுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண் பிள்ளைகள் அனைவரும் விடுவிக்கப்பட்டு விடுவார்கள். என தெரிவித்தார். அமைச்சருடன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச அமைப்பாளர் குகதாசன் அவர்களும் வருகை தந்திருந்தார்.

---

*சி. சாருஜன், யாழ்ப்பாணம்*

**வெளிநாடுகளில் வாழும் சில தமிழர்களால் 'நாடு கடந்த தமிழீழ அரசு' என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அமைப்புக்கு, புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர்களில் ஒருவரான உருத்திரகுமாரன் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள செய்தி பற்றி உங்கள் கருத்து என்ன?**

ஒரு நண்பர் சொன்ன சம்பவம் இது:-

அங்கொடை மனநோயாளிகளுக்கான மருத்துவமனையில், ஒரு மனநோயாளி அண்ணாந்து கூரையைப் பார்தத்துக் கொண்டு தனது இரு கைகளையும் தூக்கி விசுக்கி ஆட்டிக் கொண்டிருக்கிறார்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த இன்னொரு மனநோயாளி, அவரைப் பார்த்துச் சொல்கிறார்:

"டே! எனக்குத் தெரியும் நீ என்ன செய்யிறாய் என்டு"

முதலாமவர்:"சொல்லு பார்ப்பம் என்ன செய்யிறன் என்டு"

இரண்டாமவர்:"நீ வானத்திலை இருக்கிற நட்சத்திரங்களை உன்ர கையாலை பிடிச்சுக் கொண்டிருக்கிறாய்."

முதலாமவர்: "அடே! நீ கண்டு பிடிச்சு விட்டாய்! நீ சரியான கெட்டிக்காரன் தான்டா!"

(இரு மனநோயாளிகளும் கைகொட்டி ஆரவாரித்துத் துள்ளுகிறார்கள்)

யதார்த்தங்களை மறுதலித்து, மிகப் பகட்டான கற்பனையின் அடிப்படையிலான மாயத் தோற்றங்களில் வாழ்பவர்களும் ஒருவித மனநோயாளிகளே!

*ஆ.திருக்குமரன், ஜேர்மனி;*

**போரின் பாதிப்புகளினால் தமது அடிப்படை வாழ்வாதாரங்களையே இழந்து அல்லற்பட்டு வாழும் அடித்தள மக்களுக்கு, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடமிருந்து போதியளவு உதவிகள் கிடைக்கின்றனவா?**

மிகவும் சொற்ப அளவிலேயே கிடைக்கிறது!

சண்டைக்குத் தாராளாமாகக் கொடுத்த கைகள், சமாதானத்திற்கு தாராளமாகக் கொடுக்கத் தயங்குகின்றன.

அழிவிற்கு அள்ளிக் கொடுத்த கரங்கள், வாழ்விற்கு அள்ளிக் கொடுக்கப் பின்வாங்குகின்றன.

ஆயுதக் கொள்வனவுகளுக்கு கொட்டிக் கொடுக்க முன்வந்த மனங்கள், வாழ்வாதாரங்களுக்கு வழங்க சாக்குப் போக்குகளை முன்வைக்கின்றன.

தாங்களும் காரணம் என்ற குற்ற உணர்வோ பச்சாதாபமோ யாதுமின்றி, "இதற்கெல்லாம் சிங்கள அரசாங்கம் தானே காரணம்? அரசாங்கமே பார்த்துக் கொள்ளட்டும்" என்ற விதண்டாவாதம் வேறு!

*ச. நித்தியானந்தன், உரும்பிராய்*

**தமிழர்களின் எதிரிகள் யார்?**

சந்தேகமில்லாமல் தமிழர்கள்தான்! எத்தனை அரிய சந்தர்ப்பங்களை, இந்திய-இலங்கை ஒப்பந்தம், சந்திரிகா அரசாங்கம் முன்வைத்த முன்மொழிவுகள், ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சியின்போது உலக நாடுகளின் அனுசரணையுடன் ஏற்பட்ட ஒஸ்லோ ஒப்பந்தம் போன்றவற்றையெல்லாம்? தூரநோக்குள்ள அரசியல் அணுகுமுறை இன்மையால் எப்படியெல்லாம் சிதறடித்தோம்!

இப்பொழுது மட்டும் என்னவாம்!. எங்களுக்கு சிங்களவர்கள் எதிரி, சிங்கள அரசாங்கம் எதிரி, கருணாநிதி எதிரி, ஜெயலலிதா எதிரி, இந்தியா எதிரி, சீனா எதிரி, அரபு



நாடுகள் எதிரி, மேற்குலக நாடுகள் எதிரி, ஐக்கிய நாடுகள் சபை அலுவர்கள் எதிரி! இவர்களையெல்லாம் எதிரிகளாக்கியது யார் நாம்தானே! எனவே, தமிழர்களின் எதிரிகள் தமிழர்களாகத்தானே இருக்கமுடியும்?

*ச. பொன்னம்பலம் , திருகோணமலை*

**'விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டுமா' என்பது தொடர்பான அரசாணை குறித்து இந்திய நடுவர் மன்றத்தால் நடைபெறும் விசாரணையில் விடுதலைப் புலிகளின் சார்பில் ஆஜராக அனுமதி வேண்டும் என்று மதிமுக பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கோரியது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அவரும், மற்றும் நெடுமாறன், திருமாவளவன், சீமான் போன்றோரும் செஞ்சோற்றுக்கடன் தீர்க்க முனைகிறார்கள். அவ்வளவுதான்! புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்கப்பட்டுவிட்டால் ஈழத்தமிழர்களின் துயர் நீங்கி விடுமா? புலிகள் இயக்கத்தின் நலனையும், ஈழத்தமிழர்களின் நலனையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பியடித்ததின் அறுவடையைத்தானே தமிழர்கள் இன்று அனுபவிக்கிறார்கள். போதாதா?

*தி.விஷ்ணுகாந்தன், மட்டக்களப்பு*

**போர் முடிந்தும் இதுவரை இலங்கை அரசாங்கம் தடுப்புக்காவலில் உள்ள யுத்தத்துடன் தொடர்புடைய கைதிகளை விடுவிக்கவில்லை, இடம் பெயர்ந்த தமிழர்கள் முழுமையாக சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் பற்றி?**

ஏறத்தாழ இருபத்தி ஏழு வருடங்களாக நடைபெற்ற போரை இலங்கை அரசு மே 2009ல் முடிவிற்குக் கொண்டு வந்து ஒன்றரை வருடங்கள் ஆகியிருக்கின்றன. இந்தக் குறுகிய காலத்தில், நீங்கள் குறிப்பிட்டிருக்கும் எல்லாமே முற்றுமுழுதாக நிறைவேற்றப்பட வேண்டும் என எதிர்பார்ப்பது நடைமுறை யதார்த்தமில்லை.

அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படவில்லைதான் ஆனால், இலங்கை அரசு பலரைத் தொடர்ந்து விடுவித்துக் கொண்டு வருகிறது. இடம்பெயர்ந்த தமிழரகள் முழுமையாக சொந்த இடங்களில் இன்னமும் குடியமர்த்தப்படவில்லைதான்? ஆனால், தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருந்த பலர் விடுவிக்கப்பட்டு உயர்பாதுகாப்பு வலயங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களைத் தவிர, பிற இடங்களில் குடியேறி வருகிறார்கள்.

இவைகள் மேலும் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டுந்தான். அதற்காக வேண்டிய ஆக்கபூர்வமான உந்துதல்கள் அரசுக்கு கொடுக்கப்பட வேண்டியதுதான். ஆனால், ஒன்றுமே நடைபெறவில்லை என அரசாங்கத்தைத் திட்டும் எதிர்மறை அரசியல் எதுவித பயனுமளிக்காது

இதில் ஒரு கீழ்த்தரமான வேடிக்கையையும் நாம் அவதானிக்க வேண்டியது அத்தியாவசியமாகும். இப்படிக் கூறுபவர்கள், எழுதுபவர்களில் அநேகர், அப்பாவித் தமிழர்கள் கைதிகளாவதற்கும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இடம்பெயர்வதற்கும் தங்கள் பேச்சுக்களாலும், எழுத்துக்களாலும் செயல்களாலும் துணைபோனவர்கள்! இவர்களுக்கு தமிழர்களின் இன்னல்கள் பற்றியோ அரசாங்கத்தின் மனிதஉரிமை மீறல்கள் பற்றியோ பேசவோ, எழுதவோ கிஞ்சித்தும் அருகதை கிடையாது. இவர்களில் பலர் "இந்தா வரப்போகுது இன்னுமொரு சண்டை அதைத் தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை" என்று தூபம் போட்டு, சிங்களப் பேரினவாதிகள் சிலரின் நிகழ்ச்சி நிரல்களுக்கு இன்னமும் துணைபோகிறவர்கள்!

தமிழர்களின் நலன்கள் பற்றியோ, ஜனநாயக விழுமியங்கள் பற்றியோ, மனித உரிமைகள் பற்றியோ கூறுவதற்கு யாருக்கு உரிமை இருக்கிறது என்றால், மிலேச்சத்தனமான குரூரப் போரும், தவறான அரசியல் அணுகுமுறைகளும், தமிழ்த்தரப்பினரது மனிதஉரிமை மீறல்களும், ஒட்டுமொத்தமாக தமிழர்களை நிர்க்கதி நிலைமைக்குத்தான் கொண்டுவரும் என்று எச்சரிக்கை செய்தவர்களுக்கு மட்டுந்தான்!

## அரசியல் தீர்வொன்றுக்காக எல்லாத் தரப்பினர் மத்தியலும் ஐக்கியத்தை உருவாக்குவது

# இடதுசாரி - முற்போக்கு சக்திகளின் வரலாற்றுக் கடமை

### இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 19 வது தேசிய காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலிருந்து

கொழும்பில் 2010 ஆகஸ்ட் 27,28,29ம் திகதிகளில் நடைபெற்ற, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 19வது தேசிய காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அறிக்கையின், 'தேசிய வளர்ச்சிப் போக்குகள்' என்ற பகுதியின் சில முக்கிய அம்சங்கள் தேனி இணையத் தளத்தில் வெளியிடப்பட்டது.

2005 நவம்பரில் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியே ற் றவுடனேயே, நடைமுறையிலிருந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி விடுதலைப் புலிகள் புதிய பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிட்டனர்.

ஜெனீவா சமாதானப் பேச்சுக்கள் மூலம் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகள் பிரயோசனமற்றவை என்பது நிரூபணமாகியது.

கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், போர் நிறுத்த ஒப்பந்தத்தில் சில பாதகமான அம்சங்கள் இருந்ததை உணர்ந்த போதிலும், இன்னொரு யுத்தம் ஏற்படும் வகையில் இவ்வொப் பந்தத்தை முறிக்கக்கூடாது என்பதே அதன் நிலைப்பாடாக இருந்தது.

அதேநேரத்தில் புலிகளின் சமாதானத்திற்கு இணங்காத, சண்டைப் போக்கு பற்றிய கடந்தகால அனுபவம் பற்றிய பூரண விளக்கத்தைக் கொண்டிருந்ததால், அவர்கள் திடீர தாக்குதலில் ஈடுபட்டால் அதை முறியடிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும் என்பதும் எமது நிலைப்பாடாக இருந்தது.

**புலிகள் தம்மை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என நிலைநாட்டிக் கொண்டு, தமது பயங்கரவாத செய்கைகள் மூலம், தமிழ் மக்களுக்கான ஜனநாயக இடைவெளியையும், அவர்கள் பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைவதையும் எதிர்த்து வந்தனர். புலிகள் இந்தக் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடித்துக் கொண்டு, புலிகளுக்கு சார்பில்லாத அரசியல் ஸ்தாபனங்கள் எல்லாவற்றுக்கும் எதிராக அடக்குமுறைகளைக் கையாண்டனர்.**

இந்த அடக்குமுறைக் கொள்கையைக் கைவிடுமாறு, கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து புலிகளுக்கு வலியுறுத்தி வந்தது.

**புலிகளுக்கும், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சில சரத்துகள், புலிகளுக்கு சார்பில்லாத ஸ்தாபனங்களின் செயற்பாட்டுக்கு இடையூறாக இருந்தன.**

இந்தக் காலகட்டத்தில் தேசிய இனப் பிரச்சினை சில குறிப்பிட்ட அளவுகளில் சர்வதேச மயப்பட்டிருந்தது. பூகோள அரசியல் யதார்த்தத்தின் முன்னே, எமது வெளிநாட்டு மற்றும் பாதுகாப்பு கொள்கைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது.

எமது கட்சியின் 18வது காங்கிரஸ், ஏகாதிபத்தியத் தலையீடோ, உள்நாட்டு வெளிநாட்டு சதி முயற்சிகளோ இடம் பெறாத வகையில் விழிப்பாக இருக்க வேண்டும் என வலியுறுத்திக் கூறியிருந்தது.

மேலும் 18வது காங்கிரஸ், "இந்தப் பிரச்சினை தற்பொழுது சர்வதேச மயப்பட்டிருக்கும் அளவை நோக்குகையில், அது இறுதிக் கட்டத்தை அடைவதற்கு அனுமதித்தால், மீள முடியாத ஒரு இக்கட்டான நிலை ஏற்படும்" எனவும் எச்சரித்திருந்தது.

நான்காவது ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டுக்குள், பாதுகாப்புப் படைகள் கிழக்கு மாகாணத்தை புலிகளிடமிருந்து முழுமையாக விடுதலை செய்தன. அங்கு சிவில் நிர்வாகம் மீளமைக்கப்பட்டது.

மன்னார், பூநகரி, ஆனையிறவு, கிளிநொச்சி, முல்லைத்தீவு என்பனவற்றின் தொடர் வெற்றிகளைத் தொடர்ந்து, 2009 மே 19ம் திகதி யுத்தம் முடிவுக்கு வந்தது.

**புலிகள் நிராகரிக்கப்பட்டு, வீழ்ச்சியடைந்து, இறுதியில் தோல்வியைத் தழுவியதற்குப் பங்களித்த பிரதான காரணி, அது ஒருபோதும் ஒரு தேசிய விடுதலை இயக்கமாக இல்லாமல் இருந்தது தான். அது சர்வதேச உதவியில் தங்கியிருந்த, முற்றுமுழுதான ஒரு பயங்கரவாத இயக்கமாகும். அது தனது, சமாதானத்துக்கு உடன்படாத, யுத்தப் போக்குக் காரணமாக புலிகளுக்குச் சார்பில்லாத அமைப்புகளிடமிருந்து மட்டுமின்றி, இறுதியில் ஏகப் பெரும்பான்மையான தமிழ் மக்களிடமிருந்தும் தனிமைப்பட்டுப் போனது.**

## போருக்குப் பிந்திய நிலைமைகள்

உள்ளூராட்சி, மாகாணசபை, பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை அளவு கோலாகக் கொண்டு, போருக்குப் பிந்திய கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களின் அரசியல் வளர்ச்சிப் போக்குகளின் தன்மையை அளவிட முடியும்.

**புலி சார்பில்லாத தமிழ் அரசியல் கட்சிகளின் ஒற்றுமையின்மையின் விளைவாக, பலம் குறைக்கப்பட்ட போதிலும், போர் நடைபெற்ற காலத்தில் புலிகளின் பினாமி அமைப்பாகச் செயல்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் வசதியான முறையில் பிரதான தமிழ் அரசியல் கட்சியாக உருவெடுத்துள்ளது.**

நடைமுறையில் நிலவுகின்ற அரசியல் யதார்த்தங்களையும், தமிழ் மக்களின் மனோ நிலையையும் கருத்தில் கொள்ளாது, சிறீலங்கா சுதந்திரக்கட்சி யுத்த வெற்றியை மட்டும் கருத்திற் கொண்டு செயற்பட்டமை, தேர்தல் மூலோபாயத்தில் தீர்மானமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. சிறந்த மாற்று அணி இன்மையால் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் தலைமை, பெரும்பான்மையான ஆதரவைப் பெற்றுக் கொண்டது.

> பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வதன் மூலமும் மத்தியில் அதிகாரத்தைப் பங்கிடுவதின் மூலமும் தான் அரசியல் தீர்வை அடைவதற்கான அடிப்படையை உருவாக்க முடியும் என்பது தான் எமது கட்சியின் கொள்கை என்பதை தெரிவிப்பது அவசியமானது.

பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வதின் மூலமும், மத்தியில் அதிகாரத்தைப் பங்கிடுவதின் மூலமும் தான், அரசியல் தீர்வை அடைவதற்கான அடிப்படையை உருவாக்க முடியும் என்பது தான் எமது கட்சியின் கொள்கை என்பதைத் தெரிவிப்பது அவசியமானது.

அரசியல் தீர்வு ஒன்றை நோக்கிச் செல்வதற்கு இரண்டு விடயங் கள் தடையாக உள்ளன. அவையாவன:

1. **தெற்கில் உள்ள அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒருமைப்பாடு ஏற்படாமை.**
2. **வடக்கு கிழக்கில் உள்ள அரசியல் கட்சிகளுக்கிடை யிலும் ஒருமைப்பாடு இல்லாமை.**

அதிகமான மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளமை, உட் கட்டமைப் புகளின் அபிவிருத்தி, பொருளாதாரத்தின் புத்துயிராக்கம், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு என்பன நிறைவேற்றப்பட்டுள்ளமை உண்மையானதும் சாதகமானதும் என்பது உண்மையே. இருந்த போதிலும் அரசியல் ஒருமைப்பாடு ஒன்றை அடைவதற்கு, கால தாமதம் இன்றி இறுதித் தீர்வு காணப்படுவது அவசியமானது. நாட்டின் பிரதேசங்கள் ஐக்கியப்படுத்தப்பட்டுள்ளது உண்மை யேயாயினும், மக்கள் இன்னமும் ஐக்கியப்படுத்தப்படவில்லை. அந்தக் கடமை அரசியல் தீர்விலேயே தங்கியுள்ளது.

இப்பொழுது புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள் முரண்பாடுகள் தோன்றியுள்ளன. அவர்களது சிந்தனையில் மாற்றங்கள் ஏறபட்டு வருகின்றன.

இந்தியக் காரணியை சிறப்பாக முகாமைத்துவம் செய்வது அவசியமானது. சர்வதேசச் சூழல் சாதகமாக இருக்கின்ற இன்றைய சூழலில், அரசியல் தீர்வுக்கான புதிய அணுகு முறையை நடைமுறைப்படுத்த முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

வரலாறு எமக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ள நிலையில், நாம் இந்தச் சந்தர்ப்பத்தை ஒதுக்கிவிடவோ, நிராகரிக்கவோ, தவற விடவோ கூடாது. இதுவே அரசாங்கத்திற்கு நாம் விடுக்கும் கோரிக்கையாகும்.

**அரசியல் தீர்வொன்றுக்காக எல்லாத் தரப்பினர் மத்தியிலும் ஐக்கியத்தை உருவாக்குவது, இடதுசாரி – முற்போக்கு சக்திகளின் கடமையாகும். வடக்கிலும் கிழக்கிலும் உள்ள இடதுசாரி – முற்போக்கு சக்திகள் மத்தியில் ஐக்கியத்தை உருவாக்குவது என்பது, ஒரு முன் தேவையும், வரலாற்றுக் கடமையுமாகும் என நாம் கருதுகிறோம்.**

## சர்வதேசச் சவால்களும், தலையீடுகளும்

கிளிநொச்சி, முல்லைத்தீவு என்பன பாதுகாப்புப் படைகளிடம் வீழ்ச்சியடைந்த உடனும், போர் முற்றுப் பெறுவதற்கு முன்ன தாகவும், போர் நிறுத்தமொன்றை மேற்கொள்ள வேண்டும் என்ற சர்வதேச அழுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்தது.

ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐ.நா. அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் முற்றுமுழுதான தோல்வி யைத் தவிர்ப்பதற்காக, தலையீடுகளை மேற்கொள்ளவும், மத்தி யஸ்தம் செய்யவும் முயன்றனர்.

போர் முடிவுற்ற உடனும், இலங்கைக்கு எதிராக போர் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் தீர்மானம் ஒன்றை ஐ.நா. மட்டத்திலும், ஜெனீவாவைத் தளமாகக் கொண்டியங்கும் ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலிலும் நிறைவேற்ற முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இருப்பினும் கூட்டுச்சேரா நாடுகளின் முயற்சியால் இது தோற்கடிக்கப்பட்டது. இதில் சீனா, ரஸ்யா, வியட்நாம், கியூபா, இந்தியா, பாகிஸ்தான் என்பனவற்றின் பங்கு முக்கியமானதாகும்.

அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஐ.நா.அதிகாரிகள் ஆகியோர், இலங்கை இராணுவத்தால் இழைத்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து ஒரு ஆணைக்குழு நியமித்து விசாரிக்கப்பட வேண்டும் என தொடர்ந்து கோரி வருகின்றர்.

இதேவேளையில், இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜீ.எஸ்.பி வரிச் சலுகையும் நிறுத்தப்பட்டது. இலங்கைக்கு ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை மீண்டும வழங்குவது குறித்து பரிசீலிப்பதற் காக, ஐரோப்பிய ஒன்றியம் முன் வைத்த 15 நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் முற்றுமுழுதாக நிராகரித்துள்ளது.

போர்க் குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்காக, ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் குழுவையும் இலங்கை நிராகரித்துள்ளது. இருந்த போதிலும், சர்வதேச விடயங்கள் சம்பந்தமான விவகாரங்களில், அளவுக்கு அதிகமான பிரதி வெளிப்பாடுகளை வெளிப்படுத்தாமலும், கோபமூட்டும் தந்திரங் களில் சிக்கி விடாமலும், நாம் கவனமாக இருப்பது அவசியமானது.

**எம்மைப் போன்ற வளர்முக நாடுகளுக்குச் சாதகமான முறையில், உலக சக்திகளின் சம நிலையில் மாற்றம் நிகழாமல் இருந்திருக்குமானால், இலங்கை ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த உண்மை குறைத்து மதிப்பிடப்பட முடியாதது.**

இந்தியக் காரணியையும், அதேபோல பூகோள - அரசியல் யதார்த்தத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய தேவை, முன்னெப்போதையையும் விட மிகவும் அவசியமாகி உள்ளது.

---

# இராமஜென்ம பூமி – பாபர் மசூதி சர்ச்சை தீர்ப்பு தென்னாசிய நாடுகளுக்கு ஒரு முன்மாதிரி

**60ஆண்டுகளுக்கு மேலாக நிலவிய இராமஜென்ம பூமி - பாபர் மசூதி சர்ச்சை இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயிருந்த மனமாச்சரியங்களை முடிவுக்குக் கொண்டுவருவதில் அலகாபாத் நீதிமன்ற தீர்ப்பு ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாக அமைந்துவிட்டது.**

**அது இந்தியாவின் சாரம்சமான சகிப்புத் தன்மையின் குறியீடாகவும் அமைந்துவிட்டது. 1992 இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் பின்னர் இரு பெரும் மத சமூகங்களின் பெருவாரியான மக்களின் மனங்களில் வேதனைகளே எஞ்சியிருந்தன.**

**தற்போது நீதிமன்றம் அந்த 2.7 ஏக்கர் நிலத்தை இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் நிர்மோ அக்கராவுக்கும் பிரித்து அளித்திருக்கிறது.**

**நீதிமன்றத் தீர்ப்பின் பின் பெரும் கலவரங்களும் அனர்த் தங்களும் வருமோ என அச்சம் நிலவியது. பலரது மனங்களிலும் பதற்றம் காணப்பட்டது.**



**பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருந்தது. ஆனால் அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சகல சமூகத்தினராலும் வரவேற்கப் படுவதாக அமைந்திருந்தது.**

**இது இந்தியாவின் நீதித்துறைக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும்.**

**ஏனைய தென்னாசிய நாடுகள் இந்த நிலையை எட்டுவதற்கு இன்னும் பல தடைகளை தாண்ட வேண்டி யிருக்கிறது. சகிப்புத்தன்மை, வெவ்வேறு சமூகங்களின் தனித்துவங்கள், நம்பிக்கைகளுக்கு மதிப்பளித்தல், ஒன்றிணைந்து வாழ்தல் என்பன அலகாபாத் தீர்ப்பு செய்திகளாக இருக்கும்.**

# சமகால உலகிற்கு பொருந்தாத கொள்கைகளும் பொருத்தப்பாடானவையும்

## புலிகள் பேரினவாத அரசு யந்திரத்தின் மீது என்னதான் வலிமை மிகுந்த தாக்குதல்களைத் தொடுத்தாலும் அவர்களின் போராட்டம் எந்தக் கட்டத்திலும் தார்மீக வலிமை கொண்டதாக இருக்கவில்லை

மனிதன் தனது வரலாறு முழுவதும் பின் தங்கிய சமூக நிலையிலிருந்து முன்னேறி வந்திருக்கிறான். அவனுடைய மிருக குணம் சமாந்தரமாக அவ்வப்போது தலையெடுத்தே வந்திருக்கிறது.

யப்பானில் அணு குண்டு வீசப்பட்டது. பல லட்சம் யூதர்கள் ஜெர்மனியிலும் ஐரோப்பாவிலும் கொல்லப்பட்டது

அதற்குப் பின்னர் வியட்நாமிலும் மத்திய கிழக்கிலும் தொடர்ச்சியாக நடந்த மனித உயிரிழப்புக்கள், அண்மையில் ருவாண்டாவில் நிகழ்ந்தவை, இலங்கையில் நிகழ்ந்தவை என பட்டியல் நீள்கிறது.

ஆப்கானிலும் ஈராக்கிலும் மிக மோசமான மனித உயிரழிவுகள் நிகழ்கின்றன.

சூடானில் கத்தோலிக்க மக்களுக்கு எதிரான அத்துமீறல்கள் நிகழ்கின்றன.

1940 களில் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை. இந்தியா கீழைத் தேசத்தில் மிகப் பெரிய ஜனநாயக நாடு. சிம்பாவே தென்மேற்கு ஆபிரிக்கா, தென்னாபிரிக்க நாடுகள் ஆகியன சுதந்திரம் பெற்றன.

காலனியாதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் சம்பந்தப்பட்ட பிரக்ஞைபூர்வமான நாயகர்களாக உலகளலாவியளவில் அறியப்பட்ட நெல்சன் மண்டேலாவும், கஸ்ரோவும் வாழ்கிறார்கள்.

பழங்கால சிலுவை யுத்தம் உட்பட கடவுளின் பேரால் நடைபெற்ற சண்டைகள், இன்று வெவ்வேறு வடிவங்களில் தொடரவே செய்கின்றன.

ஆனால் இன்று மனிதர்கள் தமது ஆதிக்க குணாம்சங்களில் இருந்து விடுபட வேண்டிய தேவை இருக்கிறது. மனிதருக்கும் மனிதருக்கும் இடையேயான உறவு நிலை சவால்கள் மாத்திரமல்ல மனிதருக்கும் இயற்கைக்கும் இடையிலான சவால்களும் முழு உலகையுமே அழித்துவிடும் அபாய எல்லையை தாண்டியுள்ளன.

நாம் மனித உரிமை, மனித உரிமை என்று கூப்பாடு போடுகின்றோம் ஆனால் மனித குலத் தையும் அதன் சக ஜீவ ராசிகளையும், வாழிடத் தையும் சங்காரம் செய்யும் ஆயுதங்கள் நவீன வடிவில் உலை கலங்களில் இருந்து புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மனித சுதந்திரம் பெரிதாக மதிக்கப்படும் நாடுகள் என்று கூறப்படுபவற்றிலேயே இந்த உலைக் கலங்கள் அதிகமாக காணப்படுகின்றன.

ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் தென்னமெரிக்க நாடுகளிலும் கொடிய ஆயுதங்கள் சிதறிக் கிடக்கின்றன. வெடி மருந்துகள் பூமியில் புதையுண்டு போய் கிடக்கின்றன.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் கண்ணிவெடி, மிதிவெடி அபாயங்கள் மாத்திரமல்ல நில நீர் வளங்களை மண்ணடியில் புதையுண்டுள்ள வெடிமருந்துகள் பாதித்துள்ளன.

வியட்நாமில் வயல் நிலங்கள் அமெரிக்க குண்டு வீச்சுக்களால் பாழடைந்ததை நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

இந்த இடத்தில்தான் அண்ணல் காந்தியடிகளும் மனத் திரையில் வருகின்றார். மனித தார்மீக நியாயங்களுக்காக அறவழியில் கோடிக்கணக்கான மக்களை அணிதிரட்டியவர் அவர். அழிவுகரமான ஆயுதங்களை பற்றிய பட்டறிவு கொண்ட மாபெரும் விஞ்ஞானி ஐன்ஸ்டினால் மிகவும் நேசிக்கப்பட்டவர்.

அரசினதும் அதற்கு அப்பாற்பட்ட குழுக்களினதும் பயங்கரவாதங்கள் என்று உலகின் பல பாகங்களிலும் தனது குரூர முகத்தை காட்டி நிற்கின்றன.

மனித குலத்திற்கு எதிரான இந்த செயற்பாடுகளுக்கு எதிராக உலகளாவிய மக்கள் இயக்கம் தேவைப்படுகிறது. அழிவுகர ஆயுத உற்பத்திக்கு எதிராகவும் இயக்கம் தேவைப்படுகிறது.

காந்திய வழியில், அறவழியில் அது முன்னெடுக்கப்பட வேண்டும். உலகின் மனித உரிமை அமைப்புக்கள், ஜனநாயக அமைப்புக்கள் இதற்காக கரம் கோர்க்க வேண்டும்.

**தி.ஸ்ரீதரன்**

மனித குலத்தினதும் இந்த புவிக்கோளினதும் எதிர்காலத்தை பாதுகாக்க நாம் இணைந்து செயற்பட வேண்டும்.

சிறுபான்மை சமூகங்களின் மீது மேலாதிக்கத்தை திணிப்பது தனது சொந்த பொருளதார தேவைகளுக்காக நாடுகளை ஆக்கிரமிப்பது அடிப்படைவாத சக்திகளுக்கு உந்துதல் அளிப்பது, இந்த அடிப்படைவாதத்தை அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான கருவியாக பயன்படுத்துவது, இன்னோரன்ன செயற்பாடுகள் உலகளாவிய அளவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். ஆயுதங்களை வைத்திருக்கும் குழு பயங்கரவாதிகளானாலும் சரி அரச பயங்கரவாதிகளானாலும் சரி குடி மக்களை கொல்வதற்கும் பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துவதற்கும், வளங்களை சூறையாடுவதற்கும் தமக்கு உரிமை இருப்பதாக கருதுகிறார்கள்.

இத்தகைய போக்குகளுடன் போதைவஸ்த்து கடத்தல்காரர்களும் ஊழல்வாதிகளும், ஆயுத வியாபாரிகளும் இணைந்து செயற்படுகிறார்கள்.

வாழு, வாழ விடு மனித குலத்தின் சகவாழ்வு என்பதே இங்கு தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

இன சமூகங்களை கருவறுப்பது, அவற்றின் அடையாளங்களை இல்லாதொழிப்பது என்ற இழிவு எதிர்கால மனித குல வாழ்விற்கு பொருத்தமானவையல்ல. இவை மனங்களில் இருந்து தூக்கி எறியப்பட வேண்டும்.

உலகின் வளங்கள் சரியாக பகிரப்பட வேண்டும். காலனியாதிக்கம் சிறுபான்மை சமூகங்கள் மீதான ஒடுக்குமுறை என்பன முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். தனிமனிதனின் சுதந்திரம் இன சமூகங்களின் சுதந்திரமும் பேணப்பட வேண்டும்.

நாட்டின் போலி இறைமையின் பெயரால் சமூகங்கள் மீது கொடுமை இழைப்பது ஜனநாயகத்தை மறுப்பது, நீதியான சமூக எண்ணம் கொண்டவர்களால் அனுமதிக்க முடியாதது மனித குலத்தின் எதிர்காலத்துக்கும் நல்லதல்ல.

இலங்கையை பொறுத்தவரை இந்த நாடு முன்னேற்றப் பாதையில் செல்வதானால் செழுமைமிகு எதிர்காலத்தை எட்டுவதானால் பல சவால்களை வென்று முன் செல்ல வேண்டியிருக்கிறது.

முதலாவது இனங்களின் சமுத்துவம் இந்த நாட்டில் உறுதிப் படுத்தப்பட வேண்டியிருக்கிறது.

மத, கலாச்சார மொழி, பாரம்பரியம் மதிக்கப்படல் வேண்டும்.

சட்ட ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

சமூகங்களை காயப்படுத்தும் விதமான சொற்பிரயோகங்கள் செயல்கள் தடுக்கப்பட வேண்டும்.

அமரத்துவமான புரிதல் நிலை சமூகங்களிடையே ஏற்படுத்தப்படல் வேண்டும்.

சமூக ஏற்றத்தாழ்வு இடைவெளியை குறைப்பதற்கான முன்னெடுப்புக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஏழை என்றும் அடிமை என்றும் இந்த நாட்டில் இல்லை என்ற நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும்.

உலகளாவிய அளவில் மனித குலத்துடன் நட்புறவு சுதந்திரமான வாழ்வில் எமக்குள்ள கரிசனைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

வேகமாக மாறிவரும் இயற்கையின் மாற்றங்கள் பேரழிவுகளை தடுக்க பூமி நம்பகமான வாழிடம் என்பதை உறுதிப்படுத்த நாம் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

உலகின் வெம்மையை தணிப்பதற்கு மாத்திரமல்ல பசி என்ற வெம்மையை தணிக்க சுகாதாரமான அறிவார்ந்த வாழ்வை ஏற்படுத்த நாம் உலகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும்.

நாம் எமது பெருமைமிகு மரபுகள் என்று கூறிக்கொண்டே சிறுமையான சிறுமை படைத்த மனிதர்களாய் வாழ்வது பத்தாம் பசலித் தனமானது.

மகிழ்ச்சியான வாழ்வொன்றை எமது இலங்கை தீவிற்கும் உலகுக்கும் படைக்க எமது பங்களிப்பை வழங்க முன்வருவோம்.

அகங்காரங்களை களைவோம். ஐக்கியமாக செயற்படுவோம்.

புத்தரும், காந்தியடிகளும் உலகிற்கு ஞான வெளிச்சத்தை தந்தவர்கள். நாம் அவர்களை பின்பற்றியா வாழ்கிறோம்.

“பாமரராய் விலங்குகளாய் பான்மை கெட்டு” வாழ்கிறோம்.

இந்த நிலை மாற வேண்டும். மாற்றம் என்பது என்ன நிஜம். நாம் ஒளிரும் மாறுதலுக்காக நம்மை அர்ப்பணிப்போம்.

# மியான்மர்: ஆங் சான் சூ கி விடுதலை



மியான்மரின் ஜனநாயகத் தலைவர் ஆங் சான் சூ கீ, 15 ஆண்டுகள் வீட்டுக் காவலுக்குப் பின்னர் நவம்பர் 13 ல் விடுதலை செய்யப்பட்டார்.

யாங்கூனில் உள்ள அவரது வீட்டின் முன் நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு அவரை உற்சாகமாக வரவேற்றனர். வீட்டின் வாசலுக்கு வந்த ஆங் சான் சூகி, அங்கு கூடியிருந்த மக்களைப் பார்த்து கையசைத்தார். மகிழ்ச்சி ஆரவாரம் பொங்க மக்கள் அவரை வரவேற்றனர்.

**தேசத் தந்தையின் மகள்:** 1945 ஜூன் 19-ல் யாங்கூனில் பிறந்தார் ஆங் சான் சூ கீ. மியான்மரின் தேசத் தந்தையாகக் கருதப்படும் அவரது தந்தை ஆங் சான், 1947-ல் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து நாட்டிற்கு விடுதலைப் பெற்று தந்தார். ஆனால், அதே ஆண்டில் ராணுவ அதிகாரிகளால் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

ஏதும் அறியாத குழந்தையாக தாயின் அரவணைப்பில் வளர்ந்தார் சூ கீ. அவரோடு பிறந்த 2 சகோதரர்களில் ஒருவர், சிறுவயதிலேயே ஏரியில் மூழ்கி இறந்து விட, மற்றொரு சகோதரர் ஆங் சான் ஓ, அமெரிக்காவில் குடியேறி விட்டார்.

அரசியல் பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்த சூ கீ, பள்ளிப் படிப்பை யாங்கூனில் முடித்தார். 1960-ல் அவர் இந்தியாவுக்கான மியான்மர் தூதராக நியமிக்கப்பட்டார். அப்போது தில்லியில் உள்ள லேடி ஸ்ரீராம் கல்லூரியில் அரசியலில் பி.ஏ. பட்டம் பெற்றார். 1969-ல் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தத்துவம்,அரசியல், பொருளாதாரத்தில் பட்டம் பெற்றார். அதன் பின்னர் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் குடியேறிய அவர், ஐ.நா. சபையில் 3 ஆண்டுகள் பணியாற்றினார்.

**பிரிட்டிஷ் மருமகள்:** 1972-ல் பிரிட்டனைச் சேர்ந்த மைக்கேல் ஆரிஸ் என்பவரை திருமணம் செய்தார். லண்டனில் குடியேறிய தம்பதியினருக்கு அலெக்சாண்டர் ஆரிஸ், கிம் ஆகிய 2 குழந்தைகள் பிறந்தன. அப்போது லண்டன் பல்கலைக் கழகத்தில் பி.எச்டி. பட்டம் பெற்றார்.

அதன் பின்னர், இந்தியாவுக்கு வந்த அவர் சிம்லாவில் உள்ள ஐஐஏஎஸ் கல்வி நிறுவனத்தில் ஆராய்ச்சிப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

**அரசியல் வாழ்க்கை:** உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த தனது தாயைப் பார்க்க 1988-ல் அவர் மியான்மருக்குத் திரும்பினார். அப்போது தான் அவரது அரசியல் வாழ்க்கை ஆரம்பமானது. ராணுவ ஆட்சியாளர்களின் பிடியில் சிக்கித் தவித்த மக்களை மீட்க, 1988 செப்டம்பர் 27 ல் தேசிய ஜனநாயக லீக் என்ற கட்சியைத் தொடங்கி மகாத்மா காந்தியின் பாதையில் அஹிம்சை வழியில் போராடினார்.

அவரது எழுச்சியைத் தடுக்க திட்டமிட்ட இராணுவ ஆட்சியாளர்கள் 1989 ஜூலை 20-ல் அவரை வீட்டுக் காவலில் சிறைவைத்தனர். அவர் காவலில் இருக்கும்போதே 1990-ல் அங்கு பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில் சூ கீயின் கட்சி, 59 சதவீத வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றது. ஆனால், அந்தத் தேர்தலை ரத்து செய்த ராணுவ ஆட்சியாளர்கள் சூ கீயை தொடர்ந்து வீட்டுக் காவலில் வைத்தனர்.

**அமைதிக்கான நோபல் பரிசு:** அவரது ஜனநாயக சேவையைப் பாராட்டி 1990-ல் அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. அந்த நிதி மூலம் மியான்மர் மக்களின் சுகாதாரத்துக்கான அறக்கட்டளையை நிறுவினார்.

1996-ல் அவர் வீட்டுக் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டார். அப்போது அவர் சென்ற கார் அணிவகுப்பின் மீது 200-க்கும் மேற்பட்டோர் தாக்குதல் நடத்தினர். இதில் சூ கீயின் ஆதரவாளர்கள் 70 பேர் வரை உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து அவர் மீண்டும் வீட்டுக் காவலில் அடைக்கப்பட்டார். 1999-ல் லண்டனில் அவரது கணவர் உயிரிழந்தபோது, இறுதிச்சடங்கில் பங்கேற்கக்கூட அவர் அனுமதிக்கப்படவில்லை.

பின்னர், ஐ.நா. சபையின் முயற்சியால் 2002-ல் அவர் விடுவிக்கப்பட்டார் ஆனால், அடுத்த ஆண்டில் மீண்டும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

விடுதலையும், வீட்டுக் காவலும் அடுத்தடுத்து தொடர்ந்தன. சுமார் 21 ஆண்டுகளாக மியான்மரில் ஜனநாயகம் மலர போராடி வரும் அவர், 15 ஆண்டுகள் வீட்டுக் காவலில் இருந்துள்ளார்.

**பொதுத் தேர்தல்:** அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலம் முடிந்து கடந்த ஆண்டே அவர் விடுதலைச் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அவரது வீட்டுக்கு ஏரி வழியாக நீந்திச் சென்ற அமெரிக்கரை சந்தித்ததற்காக மீண்டும் 18 மாதங்கள் வீட்டுக் காவல் நீட்டிக்கப்பட்டது.

இந்த வழக்கில் அவரது காவல் நவம்பர் 13ல் முடிவடைய இருந்தநிலையில், நவம்பர் 7ல் அங்கு பொதுத் தேர்தலை நடத்தி ராணுவ ஆட்சிக்கு சாதகமான கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆங் சான் சூ கீ தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படவில்லை. அவரது கட்சியும் தேர்தலைப் புறக்கணித்தது.

பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகி ராணுவத்துக்கு சாதகமான ஆட்சி பொறுப்பேற்க உள்ள நிலையில், ஆங் சான் சூ கீயை ராணுவ ஆட்சியாளர்கள் விடுதலை செய்துள்ளனர். 65 வயதாகும் அவர் மீண்டும் அரசியலில் வலம் வருவார் என்று அவரது ஆதரவாளர்கள் எதிர்பார்க்கின்றனர். இப்போது உலகமே, சூ கீயின் உதட்டசைவுக்காக காத்திருக்கிறது.

**நன்றி: தினமணி**

# புலிகள் எமக்கு செய்த கொடுமைகளுக்கு எதிராக பழிவாங்கும் போக்கு கூடாது

### ஜேர்மனி ஸ்ருட்கார்ட் நகரில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் மாநாட்டில் கலந்து கொண்டு வரதராஜப்பெருமாள் தெரிவிப்பு

(தொகுப்பு : தேனி இணையத்தளம்)

ஜெர்மன் ஸ்ருட்காட் நகரில் அக்டோபர் 30, 31 ஆகிய இரு தினங்களில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சர்வதேச கிளைகளின் மாநாடு நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல் அமைப்பின் மூத்த தலைவர்களில் ஒருவருமான வரதராஜப்பெருமாள் அவர்களும் ஈ.பி.ஆர்.எல்.எப உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

வரதராஜப்பெருமாள் அவர்கள் இலங்கை அரசியலும் தமிழர்களின் போராட்ட வழிமுறைகளும் இனி தமிழ்மக்கள் செய்யவேண்டிய விடயங்கள் என்ன என்பது பற்றி தனது உரையில் பல விடயங்களை தொகுத்து உரையாற்றியிருந்தார்.

தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினை எப்படி ஆரம்பமானது பற்றியும் இனமுரண்பாடுகளின் தோற்றங்கள் பற்றியும் வரலாற்று சம்பவங்களுடன் எடுத்துரைத்தார். மன்னர் காலத்தில் அரசர்களிடையே முரண்பாடுகள் இருந்தனவே தவிர தமிழ் சிங்கள இனமுரண்பாடுகள் இருந்திருக்கவில்லை. ஆனால் தமிழ் சிங்கள இனமுரண்பாடுகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்றதாக கூறப்படுவது தவறு என்றார். வாக்குரிமை எப்போது இலங்கையில் கொண்டு வரப்பட்டதோ அப்பொழுதிருந்தே இனமுரண்பாடுகளுக்கான கூறுகள் ஆரம்பமாகிவிட்டன. பின்னர் கொண்டுவரப்பட்ட தினச்சிங்கள சட்டம், விவசாய குடியேற்றம் என்கிற பெயரில் கொண்டுவரப்பட்ட குடியேற்றங்கள் தமிழர்கள் தரப்பில் இருந்து இனமுரண்பாட்டை தோற்றுவித்தது என்றார். பண்டா செல்வா, டட்லி செல்வா ஒப்பந்தங்கள், 50க்கு 50, சமஷ்டிக்கோரிக்கை போன்ற அரசியல் விடயங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைத்த அவர் தமிழரசுக் கட்சியின் தவறும் அவர்கள் தமது வாக்கு வங்கியை தமது நலன்களுக்காக உபயோகித்தமையையும் சுட்டிக்காட்டியிருந்தார்

தமிழர் தரப்பில் இலங்கை அரசுகளினால் கிடைக்கப்பெற்றதை உரியநேரத்தில் பெற்றுக்கொள்ளாமல் இழுத்தடித்து மறுதலித்தது ஜீஜீ காலத்தில் இருந்து பிரபாகரன் காலம் வரைக்கும் நடைபெற்ற ஒன்றாகும். தனி அரசு கோரிக்கைக்கான ஊற்று தமிழரசு தோற்றம் பெற்ற காலத்திலிருந்து ஏற்பட்ட ஒன்றாகும். 70க்கு பிற்பாடு தமிழரசுக் கட்சியினர் ஊட்டி வளர்த்த சிங்கள பேரினவாதத்திற்கு எதிரான அரசியல் இளைஞர்களின் ஆயுதப்போராட்டத்திற்கு வழிவகுத்தது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழராய்ச்சி மாநாட்டின் போது ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தமிழத் தேசிய அரசியல்வாதிகளுக்கு வாய்ப்பாக அமைந்தது. பெடியங்கள் விடமாட்டாங்கள், ஆயுதம் எடுப்பாங்கள், துரோகிகளுக்கு இயற்கை மரணம் கிடையாது என வன்முறையினை தூண்டும் வகையிலான பேச்சுக்கள் இளைஞர்களை ஆயுதம் எடுத்துப் போராடத் தூண்டியது. 1974ம் ஆண்டு வரை தமிழீழம் என்கிற சொல் இருக்கவில்லை. 1977ல் அது அறிமுகப்படுத்தப்பட்டது. என்றார்



தமிழ் இளைஞர்கள் அனுபவித்த சிறை வாழ்க்கைகள் அதனால் ஏற்பட்ட போராட்ட எழுச்சிகள் 83ல் ஏற்பட்ட இனக்கலவரம் என்பன பற்றி எடுத்துரைத்த வரதராஜப்பெருமாள் அவர்கள் இலங்கை இந்திய ஒப்பந்தம் வடக்கு கிழக்கு மாகாண சபை ஆகியவை தொடர்பான விடயங்கள் பற்றிய கருத்துக்களை தெளிவாக குறிப்பிட்டார். இந்திய அரசு எமக்கு வழங்கிய ஆதரவை தமிழ்மக்களின் அரசியல் நலன்களுக்கு சாதகமாக பயன்படுத்த முடியாத நிலையையும் புலிகள் சகலதையும் மறுதலித்து குழப்பியடித்ததையும் சுட்டிக்காட்டினார். புலிகள் ஒவ்வொரு தடவையும் காப்பாற்றப்பட்டு வந்ததை குறிபபிட்ட அவர் புலிகளின் தோல்விக்ககான காரணங்களை சம்பவங்களுடன் எடுத்துரைத்தார். வடமராட்சி தாக்குதலின்போது இந்திய அரசாலும் இந்திய இராணுவத்துடனான மோதலின் போது பிரேமதாசாவாலும், சந்திரிகா காலத்தில் நோர்வே அரசினாலும் புலிகள் காப்பாற்றப்பட்டு வந்துள்ளனர். ஆனால் கடந்த வருடம் புலிகள் சந்தித்த நெருக்கடியின் போது அவர்களை காப்பாற்ற யாரும் வரவில்லை. முள்ளிவாய்க்காலில் அமெரிக்க அரசு கப்பல் அனுப்பி தம்மை காப்பாற்றும் என்கிற முயற்சியை நம்பியிருநத பிரபாகரனின் மரணத்துடன் தமிழர்களின் ஆயுதப போராட்டம் முடிவுக்கு வந்ததை குறிப்பிட்டார் இனி என்ன செய்யவேண்டும்?. தமிழர்கள் ஏன் தோற்றார்கள்? பலிகள் ஏன் தோற்றார்கள்? தாம் சொல்வதைத்தவிர வேறு எதையும் கேட்கக் கூடாது என்கிற புலிகளின் ஏக பிரதிநிதித்துவப் போக்குகளின் விளைவுகள் தமிழர்களை எங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது?. இனியாவது தமிழர்களின் சிந்தனைகளில் மாற்றம் வரவேண்டும். பல்வேறு கருத்துக்களை கேட்க வேண்டும்.அவற்றை கேட்கின்ற பொறுமையும் நாகரீகமும் வேண்டும். சமூகம் தோற்பதில்லை சமூகத்தின் மீள் எழுச்சி வேையான ஒன்றாகும். தமிழ்மக்கள் ஒருமித்த குரலில் ஒலிக்கின்ற ஒற்றுமை வேண்டும். தற்போது உருவாகியிருக்கும் தமிழ்க்கட்சிகளின் அரங்கம் ஒற்றுமையாக குரல் கொடுப்பதற்கான வெளிப்பாடு ஆகும். நியாயமான கோரிக்கைகள் உருவாக்கப்பட வேண்டும். இலங்கை இந்திய முற்போக்கு சக்திகளுடன் ஒன்று பட வேண்டும். ஆயதம் ஏந்தி போராடுவதற்கான அவசியம் இனி இல்லை. தமிழ்கட்சிகளுக்கிடையே தேர்தலுக்கு அப்பாற்பட்ட ஒற்றுமை வேண்டும் என்றார்.

புலிகள் எமக்கு செய்த கொடுமைகளுக்கு எதிராக பழிவாங்கும் போக்கு கூடாது. மக்கள் பலிகளை ஆதரித்த போக்கு தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ பயத்தினாலோ ஏற்பட்டதொன்றாகும். அந்த மக்களை நாம் வென்றெடுக்க வேண்டும். இதற்கு தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை வேண்டும். கட்சி மாநாடுகள் அவசியம். மக்கள் மத்தியில்: இருந்து தலைவர்கள் வரவேண்டும். ஐரோப்பாவில் தேர்தலுக்கு முன் நடைபெறும் மாநாடுகள் உட்கட்சித் தேர்தல்கள் மக்கள் மத்தியில் தெரியப்படுத்தப்படுகின்றன. அதுபோல் எமது நாட்டிலும் இத்தகைய பண்பாடுகள் வர வேண்டும்.

13 வது திருத்தச்சட்டம் ஒரு ஓட்டைகள் அடைக்கப்பட்ட வாளி போன்றது. அது ஒரு தற்காலிக தீர்வு. அதனை நிரந்தரமாக வைத்திருக்க முடியாது. பார்ப்பதற்கு இந்திய யாப்பு போல இருக்கும். நிரந்தரமான ஒரு மாற்றம் அதில் கொண்டு வரப்பட வேண்டும். ஒவ்வொரு சரத்திற்கும் அதிகாரப்பகிர்வு சார்பாக அர்த்தங்கள் கொடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். 13வது 18வது சட்டங்கள் தொடர்பாக அரசியல் விளக்கங்களை முன்வைத்த அவர் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தொடர்ந்து பதிலளித்தார்.

குறுகிய நேரம் என்றாலும் முக்கியமான விடயங்கள் அவரால் பேசப்பட்டன. புலிகளின் வீழ்ச்சிக் குப்பின் மரண அச்சுறுத்தல்கள் இன்றி மிரட்டல்கள் இன்றி சுதந்திரமாக உரையாற்றுவதற்கான வாய்ப்பு உருவாகியிருக்கிறது. புலம்பெயர் மகள் மத்தியில் இதுபோன்று சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் உருவாக வேண்டும். இது வரை காலமும் புலிகளின் கருத்துக்கள் தவிர மாற்றுக்கருத்துகள் பகிரங்கமாக முன்வைக்கப் படுவதற்கான சூழல் மிகக்குறைவாகவே இருந்தது. புலிகள் தவிர்ந்த மாற்றுக் கட்சித் தலைவர்கள் முக்கியஸ்தர்கள் மக்களைச் சந்தித்து உரையாடுவதற்கான வாய்ப்புக்கள் அரிதாகவே இருந்தன. தற்போது அத்தகைய நிலையில்லை. தற்போது உருவாகியிருக்கும் இத்தகைய சுதந்திரமான சூழல் தமிழர்களுக்கான நியாயமான போராட்டத்திற்கான வாய்ப்பாகும்.

# கிளிநொச்சியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வீடமைப்பு உதவி







கடந்த 23.10.2010 அன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான டியூ குணசேகரா மற்றும் அவரது அமைச்சின் கீழ் செயற்படும் புனர்வாழ்வு அதிகார சபை பணிப்பாளர்கள், பணியாளர்கள் கிளிநொச்சி மாவட்டதில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு உதவும் திட்டத்தின் கீழ் 500 பேருக்கு வீடுகளை அமைப்பதற்கான உதவித் தொகையை வழங்கினர். கிளிநொச்சி அரசாங்க அதிபர் தலைமையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வீடு கட்டுவதற்கு ஒரு இலட்சம் ரூபா உதவி தொகையைப் பெறுவதற்கென தெரிவுசெய்யப்பட்ட 500 பேருக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன.

அமைச்சர் டியூ குணசேகரா அவர்களுடன் புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவர் ஈ.ஏ. சமரசிங்க, பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் பொதுச் செயலாளரும், புனர்வாழ்வு அதிகார சபையின் பணிப்பாளர்களில் ஒருவருமான தோழர் தி.சிறிதரன் புனர்வாழ்வு அதிகார சபையின் பணிப்பாளர் டி.கே.ஜினதாச, கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச அமைப்பாளர் குகதாசன் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்துகொண்டு காசோலைகளை வழங்கினர்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் டியூ குணசேகரா உங்களுடைய இழப்புக்களுடன் ஒப்பிடும் போது இது ஒரு சிறு தொகை எனவும் ஆனால் மீண்டும் உங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ள நீங்கள் இயல்பு வாழ்வில் இணைந்து கொள்ள இது அவசியம் என்று குறிப்பிட்டார். வட பகுதி மக்களில் அநேகமானவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் 80 சத வீதமான மக்களின் வாழ்வாதாரங்களுக்கு அமைச்சு உதவிகளை வழங்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

யுத்தத்தின் போது சரணடைந்து தடுப்பு முகாம்களில் தங்கவைக்கப் பட்டிருந்த சுமார் 11 ஆயிரம் பேரில் 50 வீதமானவர்கள் விடுவிக்கப்பட்டுவிட்டனர். பெண்கள் வயோதிபர்கள், சிறுவர்கள் அங்கவீனமானவர்கள் அனைவரும் விடுவிக்கப் பட்டுள்ளனர். எஞ்சியிருப்பவர்களில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள சுமார் 1000 பேர் சட்டதிட்டங்களின்படி விசாரணைக்குட்படுத்தி விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தடுப்பு முகாம்களில் இருப்பவர்களில் 10 சத வீதத்தினர் பாடசாலை செல்லாதவர்கள், எழுபது சத வீதத்தினர் 3ம், 5ம், 8ம் ஆண்டு வரை கற்றவர்கள். இவர்கள் விரும்பும் தொழில் பயிற்சியையும் கல்வியையும் வழங்க வேண்டிய பொறுப்பும் எமக்குண்டு எனவும் அமைச்சர் டியூ குணசேகரா தெரிவித்தார்.

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இரத்தினப்பிட்டிய C.R.C அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.